ISBN : 978-81-685845-0-1

செந்தமிழறிஞர்கள்:108



வீரமா முனிவர்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/1-%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

வீரமாமுனிவர் (1680 – 1747)



அறிமுகம்

இத்தாலி, கேசுதிகிலியோன் என்ற சிற்றூரில் நவம்பர் 8-ந்தேதி பிறந்த கான்ச்டன்டைன் சோசப்பு பெச்கி கிறித்துவ மதம் பரப்பும் நோக்கில் 1710-ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். அதற்காக சுப்பிரதீபக்கவிராயர் என்பவரிடம் தமிழ் கற்றார். தமிழ் மேல் கொண்ட பற்று காரணமாக தன் பெயரை நல்ல தமிழில் வீரமாமுனிவர் என தன் இயற்பெயரின் பொருள்பட மாற்றிக் கொண்டார். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார்.

தமிழ் மற்றும் இலக்கியப் பணி

- இவர் காவியம், பிரபந்தம், உரைநடை அகராதி, இலக்கணம், மொழிபெயர்ப்பு என்று பல துறைகளிலும் முத்திரை பதித்தவர்.
- உயிர் எழுத்து மற்றும் உயிர்மெய் எழுத்துக்களில் நெடில் ஓசையை குறிப்பதற்காக "ஆ, ஏ" எனவும் மற்றும் நெட்டெழுத்து கொம்பை மேலே சுழித்தெழுதும் (கே,பே) வழக்கத்தை உண்டாக்கியவர்.
- இவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்கள், இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன.

படைப்புகள்

- தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார்.
- கவிதை வடிவில் இருந்து வந்த தமிழ் இலக்கிய இலக்கணங்களை எளிய உரைநடையாக மாற்றினார்.
- தமிழ்—லத்தீன் அகராதியை உருவாக்கினார். இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும்.
- 4400 சொற்களைக் கொண்ட தமிழ்-போத்துக்கீய அகராதியை உருவாக்கினார்.
- பெயரகராதி', 'பொருளகராதி', 'தொகையகராதி', 'தொடையகராதி' ஆகிய அகராதிகளை அமைத்துத் தமிழுக்குச் செழுமை சேர்த்தார்.
- 'சதுரகராதி' உருவாக்கி நிகண்டுக்கு ஒரு மாற்றைக் கொண்டு வந்தார்
- வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்தகுரு கதை, திருக்காவலூர்க்கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, தேம்பாவணி உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்

மொழிபெயர்ப்புகள்

- மொழிபெயர்ப்பின் மூலம் தமிழின் சிறப்பை மேல்நாட்டார் உணர, திருக்குறளில் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.
- தேவாரம், திருப்புகழ், நன்னூல் ஆத்திசூடி போன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழியில் வெளியிட்டார்.

விருதுகள்/பட்டங்கள்/சிறப்புகள்

- இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால் இவர் 'சுவடி தேடும் சாமியார்' எனவும்,
- மூன்று மொழி அகராதி போர்த்துக்கீஸ்-இலத்தீன்-தமிழ்-அகராதி உருவாக்கியதால், "தமிழ் அகராதியின் தந்தை" எனவும்,
- தேம்பாவணி இயற்றியதற்காக "செந்தமிழ் தேசிகர்" எனவும் போற்றப்பட்டார்.

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

தமிழ் முனிவர் வீரமாமுனிவரின் பிறந்த நாள்

https://www.vaticannews.va/ta/church/news/2024-11/interview-birthday-of-tamil-poet-veerama-munivar.html

தனது கருப்பு நிற அங்கியைக் களைந்து இந்திய துறவிகளைப்போல காவி உடையும் தலையில் தலைப்பாகையும் கையில் கோலும் கொண்டு வாழ ஆரம்பித்தார் வீரமாமுனிவர்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

தமிழின் வேர்ப்பரப்பில் தன் பிறப்பை உறுதி செய்தவர். அயல்நாட்டவராக இருந்தாலும் அழகு தமிழின் அருமை உணர்ந்தவர். அதனை அற்புதமாக தன் படைப்புக்களில் வடித்தவர் வீரமாமுனிவர். திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திச்சூடி என்னும் நூல்களை பிற மொழிகளில் மொழி பெயர்த்தவர். இத்தாலியின் வெனீஸ் நகரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள் பிறந்தவர் ஜோசப் கான்ஸ்டாண்டியுஸ் பெஸ்கி என்னும் இயற்பெயர் கொண்ட தமிழ்ப்புலவர் வீரமாமுனிவர். இளம் வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய வீரமாமுனிவர் தனது 18ஆவது வயதில் கத்தோலிக்கக் குருவாக அழைப்புபெற்று தத்துவஇயல் இறையியல் பயின்றார். இவரது பணியார்வத்தால் கவரப்பட்ட ஆயர்கள் வெளிநாடுகளில் மறைப்பணி ஆற்றுவதற்காக இவரைத் தேர்ந்தெடுத்து 1710 ஆம் ஆண்டு இத்தாலியிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பினர்.

அதே ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியாவின் கோவா துறைமுகப்பகுதியை வந்தடைந்த வீரமாமுனிவர் அங்கிருந்து கொச்சி, அம்பலக்காடு, திருநெல்வேலியின் புதுப்பட்டி, குருக்கல்பட்டி ஆகிய பகுதிகளில் ஒரு நில நாள்களும் வடக்கன்குளம், காமநாயக்கன்பட்டி ஆகிய இடங்களில் இரண்டு ஆண்டுகளும் மறைப்பணியாற்றினார். இவ்விடங்களிலேயே தனது பெயரை வீரமாமுனிவர் என்று மாற்றிக்கொண்டு தனது கருப்பு நிற அங்கியைக் களைந்து இந்திய துறவிகளைப்போல காவி உடையும் தலையில் தலைப்பாகையும் கையில் கோலும் கொண்டு வாழ ஆரம்பித்தார். இந்தியாவில் மறைப்பணி ஆற்றும்போது வீரமாமுனிவர் தமிழ் மொழியைப் பயின்று, புலமை பெற்றதுடன் நிற்காமல், அம்மொழியில் பலசெய்யுள், உரைநடை, இலக்கண நூல்களையும், அகராதிகளையும் இயற்றித் தமிழ் அன்னையை அலங்கரித்துள்ளார். 1747-ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ஆம் நாள் இம்மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலக வாழ்வை அடைந்த வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி காலத்தால் என்றும் அழியாதது.

வீரமாமுனிவரின் 344 ஆம் ஆண்டு பிறந்த நாளாகிய இன்று (08.11.2024) அவரைப் பற்றியும் அவரது தமிழ்ப்பணி பற்றியும்

நம்மிடம் பகிர்ந்து கொள்பவர் அருள்முனைவர். மரிய அருள் ராஜா சே.ச. இயேசு சபை அருள்பணியாளரான அருள்முனைவர் மரிய அருள் ராஜா அவர்கள் தற்போது சென்னை லொயோலா கல்லூரியில் இயங்கிவரும் கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களுடனான உரையாடல் மையத்தின் இயக்குநராக பணியாற்றி வருகிறார். சென்னையில் உள்ள அருள்கடல் இயேசுசபை இறையியல் கல்லூரியில் 20 ஆண்டுகளாக இறையியல் துறைத் தலைவராகவும், டெல்லியில் உள்ள வித்யஜோதி, புனேவில் உள்ள ஞானஜோதி, பெங்களுருவில் உள்ள புனித பேதுரு, புனித அல்போன்ஸ், வித்யாதீப் கல்லூரிகள், திருச்சி புனித பவுல் கல்லூரி மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களில், விவிலியம், இறையியல், சமயம் ஆகிய பாடங்களை 29 ஆண்டுகளாக்க கற்பித்து வருகின்றார்.

10 புத்தகங்களையும், 170 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் படைத்துள்ள இவர் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு பத்திரிக்கைகளிலும் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அமெரிக்கா, தென்கொரியா, பிலிப்பைன்ஸ், ஹாங்காங், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் உரையாற்றியும், மக்கள் இயக்கங்கள், மற்றும் விளம்புநிலை குழுக்களோடு தனது உரையாடலை தொடர்ந்து வருகின்றார். மேலும் இப்பணிகளோடு பல்வேறு பயிற்சிப்பட்டறைகளையும், ஆன்மிக வழிகாட்டுதல்களையும் வழங்கி வரும் தந்தை அவர்களை வீரமாமுனிவர் தமிழ்ப்பணி பற்றிய கருத்துக்களை எடுத்துரைக்க எம் வத்திக்கான் வானொலி நேயர்கள் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

https://www.tamilvu.org/courses/degree/a011/a0113/html/a01132l1.htm

நூலாசிரியர் அறிமுகம்

தேம்பாவணி என்னும் தமிழ்க் காப்பியத்தைப் படைத்து வழங்கியவர் **வீரமாமுனிவர்**. இவர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். கிறித்தவ சமயத் தொண்டுக்காகத் தமிழகம் வந்து, தமிழின் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு, தமிழ்த் தொண்டராகவும்

தமிழறிஞராகவும் மாறிவிட்ட அவரது வாழ்வையும் பணியையும் பற்றிக் காண்போம்.

வீரமாமுனிவரது வாழ்வும் பணியும்



வீரமாமுனிவர் என்பது அவரது இயற்பெயர் அல்ல. **கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி** என்பதே அவரது இயற்பெயர். கிறித்தவ சமயப் பணி செய்வதற்காக, அவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். கி.பி.1710இல் இந்தியாவுக்கு வந்தார். கோவா, கொச்சி, அம்பலக்காடு வழியாக, மதுரை மாவட்டத்தில் உள்ள **காமநாயக்கன் பட்டி**யை வந்தடைந்தார். தமது சமயப்பணி தமிழ்நாட்டில் வெற்றி பெற வேண்டுமெனில், தமக்குத் தமிழறிவு மிகவும் இன்றியமையாதது என்று நன்குணர்ந்தார். மேலும் தமிழகம் வந்து தமிழராகவே மாறி, தம் பெயரையும் **தத்துவ போதகர்** என மாற்றிக் கொண்டு, தமிழ்ப்பணியும் புரிந்த **இராபர்ட்-டி-நொபிலி** என்னும் மேலைநாட்டு இறையடியாரைப் பற்றி இவர் கேள்விப்பட்டார். அவர்போலவே, தாமும் இறைப்பணியைச் செய்திட விரும்பினார். அதனால், இவரும் தமது பெயரைத் **தைரியநாதர்** என்று மாற்றிக் கொண்டார். பின்னாளில் மக்கள் இவரை **வீரமாமுனிவர்** என்றே அழைத்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்தாம் இப்பெயரை இவருக்குச் சூட்டினர் என்பர் சிலர்.

தோற்ற மாற்றம்

வீரமாமுனிவர் பெயர் மாற்றம் செய்து கொண்டதோடு, இந்நாட்டில் இருந்த சமயத் தொண்டர்களைப் போலவே, தாமும் நெற்றியில் சந்தனம் பூசி, காதில் முத்துக் கடுக்கன் அணிந்து, காவி அங்கி உடுத்தி, புலித்தோல் பதிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொண்டார். இப்படி, தோற்ற மாற்றம் செய்துகொண்டது மட்டுமல்ல, காய்கறி உணவை மட்டுமே உண்டு, சைவ உணவினராகவும் மாறிவிட்டார். தமிழின் மீது இவருடைய பற்றை என்னென்பது! தோற்றத்தில் மட்டுமின்றி, உணவு முறையிலும் மாறியது மேலும் சிறப்பானது.

சமயப் பணி

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **குருக்கள்பட்டி** மற்றும் **ஏலாக்குறிச்சி**, **கோனான்குப்பம்** முதலிய பல இடங்களில் சமயத் தொண்டு புரிந்தார். தாம் சமயப்பணி புரிந்த இடங்களிலேயே, பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதி வெளியிட்டார். தமிழ்நாட்டுக்கு வந்து தமிழராகவே வாழ்ந்தார் வீரமாமுனிவர். 1747ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலேயே உயிர்நீத்தார். உலகில் வாழ்ந்த சமய மற்றும் மொழித்தொண்டர்கள் வரிசையிலே இவ்வாறு தமக்கென ஓர் அழியாத, தனித்துவமான இடத்தைத் தேடிக் கொண்டார் பெஸ்கி எனப்பட்ட வீரமாமுனிவர்.

வீரமாமுனிவரது படைப்புகள்

தத்தம் தாய்மொழியிலே புலவர்கள் பல்வேறு இலக்கியங்களைப் படைப்பது பொதுவழக்கு. தமது தாய்மொழி யல்லாத பிறமொழிகளை அறிஞர்கள் கற்று அதில் ஆழ்ந்த புலமை பெறுவதும் உலகில் காணக்கூடியதே. எனினும் ஒருவருக்குத் தம் தாய்மொழி யல்லாத பிறமொழியில் இலக்கியம், இலக்கணம், அகராதி முதலிய அனைத்துத் துறைகளிலும் அரிய நூல்கள் பல படைக்கும் அளவுக்கு ஆற்றலும் அரும் புலமையும் அடைவது மிகமிக அரிய செயலாகும். செயற்கரிய அச்செயலைச் செய்து, உலக வரலாற்றிலேயே தனித்து நிற்பவருள் ஒருவராக வீரமாமுனிவர் திகழ்கிறார்.

நூல்கள்

இத்தாலி நாட்டில் பிறந்து, தமது முப்பதாம் வயதிலேயே தமிழகம் வந்த அவர், தமிழில் சிற்றிலக்கியங்கள், இலக்கணம், உரைநடை, அகராதி, இசைப்பாடல்கள் முதலிய பல துறைகளில் நூல்கள் படைத்தார். அதோடு மட்டுமல்லாமல் இலக்கியப் படைப்புகளுள் மிக அரியதாகக் கருதப்படும் **தேம்பாவணி** எனப்படும் காப்பியம் ஒன்றையும் இயற்றி வெற்றி கண்டுள்ளார். மேலும் அவர், **திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை** முதலிய சிற்றிலக்கியங்களையும், **சதுரகராதி** எனப்படும்.

அகராதியையும், **தொன்னூல் விளக்கம்** என்ற இலக்கண நூலையும் எழுதியுள்ளார். இவற்றுள் **தொன்னூல் விளக்கம், குட்டித் தொல்காப்பியம்** என அழைக்கப்படும் பெருமையுடையது. இப்படிப் பல்வேறு வகையான நூல்களைப் படைத்த ஒரு புலவரைக் காண்பது, தமிழில் மட்டுமன்று; உலகின் பிற மொழிகளிலும் கூட மிக அரிய ஒன்றாகும்.



கோனான்குப்பத்தில் பெரிய நாயகி அன்னை ஆலயத்தின் முன் அமைந்துள்ள வீரமாமுனிவர் திருவுருவம்

வீரமாமுனிவர் நூல்களில் திருக்குறள்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%B1%E0%AE%B3%E0%AF%8D

வீரமாமுனிவர் நூல்களில் திருக்குறள் என்பது தமிழ்நாட்டில் வாழ்ந்த இத்தாலியரான வீரமாமுனிவர் (1680-1747) தமிழ்மறை திருக்குறளில் உள்ள அறநெறிகளை எவ்வாறு தமது நூல்களில் பயன்படுத்தினார் என்பதை விவரிக்கிறது. திருவள்ளுவரின் கருத்துகளைத் தமிழ் மக்களும் பிற நாட்டவரும் அறிந்து பயனடைய வேண்டும் என்னும் ஆர்வத்தால் வீரமாமுனிவர் திருக்குறளை ஆழ்ந்து கற்று, அதன் மெய்யறிவைத் தமது நூல்களில் புகுத்தினார்.

வீரமாமுனிவரின் திருக்குறள் பற்று

தமிழகத்தில் வீரமாமுனிவர் கத்தோலிக்க குருவாகத் திருப்பணி புரிந்த இடங்கள் பல.

- காமநாயக்கன்பட்டி
- குருக்கள்பட்டி
- வரதராசன் பேட்டை (ஐயம்பட்டி)
- ஆவூர்
- மதுரை
- மறவநாடு
- வடுகர்பட்டி
- திருக்காவலூர்

போன்ற பல இடங்களில் அவர் கிறித்தவ மறையை மக்களுக்கு அறிவித்தார். கோவில்கள் எழுப்பினார். மக்களின் ஆன்ம வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார். இயேசுவின் நற்செய்தியை எடுத்துரைத்தார்.

திருப்பலி நிறைவேற்றி, கிறித்தவ சமயச் சடங்குகள் வழி மக்களை இறையன்பிலும் பிறரன்பிலும் வளரச் செய்தார்.

திருக்காவலூர் திருமானூருக்குக் கிழக்கேயும் ஏலாக்குறிச்சிக்கு வடக்கேயுமுள்ளது. அங்குதான் முனிவர் பல்லாண்டுகள் தொடர்ந்து பணியாற்றினார். அவர் தமிழிலும் இலத்தீனிலும் இயற்றி வெளியிட்ட நூல்கள் பல அங்கிருந்தே வந்தன. தேம்பாவணியும் அங்கிருந்தே வந்திருக்கலாம்.

இறைபணியில் ஈடுபட்டிருந்த முனிவர் தமிழகத்தின் தலைசிறந்த படைப்பாகிய திருக்குறளைப் பெரிதும் போற்றினார். குறளில் உள்ள அறநெறி அவரைக் கவர்ந்து இழுத்தது. முனிவர் வாழ்ந்த 18ஆம் நூற்றாண்டில் திருக்குறள் பொதுமக்களிடையே இன்று அடைந்துள்ள உயரிய நிலையை எய்தியிருக்கவில்லை. ஆனால் வள்ளுவரின் கருத்துகளைத் தமிழ் மக்களும் பிற நாட்டவரும் அறிந்து பயனடைய வேண்டும் என்னும் ஆர்வத்தால் வீரமாமுனிவர் திருக்குறளை ஆழ்ந்து கற்று, அதன் மெய்யறிவைக் கீழ்வரும் முறைகளில் உலகறியப் பறைசாற்றினார்:

- துறவு பூண்டிருந்த தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் காமத்துப் பாலை விட்டுவிட்டு, அறம், பொருள் என்ற இரு பால்களில் வரும் குறள் அனைத்தையும் இலத்தீனில் மொழிபெயர்த்து, அம்மொழியிலேயே ஒவ்வொரு குறளுக்கும் விளக்கம், அருஞ்சொற்பொருள் ஆகியவற்றை அளித்தார். குறளை அப்படியே இலத்தீன் அரிச்சுவடி முறையில் (transliteration) எடுத்து எழுதியிருக்கிறார். வீரமாமுனிவரின் இப்படைப்பை ஜி.யூ.போப் பதித்து வெளியிட்டார். ட்ரூ, கிரவுல், எல்லிஸ் போன்ற அறிஞரும் இம்மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தினர்.

- படித்த மேனாட்டு மக்கள் மட்டுமன்றி, புலவரல்லாத, செந்தமிழ் பயிலாத தமிழ் மக்களும் குறளைப் படித்துப் பயனடைய வேண்டும் என்ற ஆர்வத்தில், முனிவர் அக்காலப்

பேச்சு நடையில் திருக்குறளுக்குப் பொருள், விளக்கவுரை மற்றும் அருஞ்சொற்பொருளுரை எழுதியுள்ளார்.

- குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரையில் 200 பாடல்களைத் தேர்ந்தெடுத்து, செந்தமிழ் பயின்ற வேதியருக்குப் பயன்படும் வகையில் எளிய தமிழில் ஆக்கியுள்ளார். இந்நூலின் பிரதி ஒன்று சென்னை அரசு பழஞ்சுவடி நூலகத்தில் டி. 161 என்ற எண் பெற்றுள்ளதாக முனைவர் இராசமாணிக்கம் குறிப்பிடுகிறார்.

தமிழ் மறையாம் திருக்குறள் வீரமாமுனிவரோடு இரண்டறக் கலந்துவிட்டபடியால், அவர் இயற்றிய நூல்களில் அது மேற்கோளாய்ப் பல இடங்களில் வருவது வியப்பில்லை. இதைச் சற்று விரிவாகக் காண்போம்.

முனிவரின் நூல்களில் திருக்குறளும் திருக்குறள் கருத்துகளும்

வீரமாமுனிவர் திருக்குறளை மேற்கோள் காட்டுகின்ற நூல்களுள் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- வேதியர் ஒழுக்கம்
- திருக்கடையூர் நிருபம்
- பரமார்த்த குருவின் கதை
- தமிழ்-இலத்தீன் அகராதி
- திருக்காவலூர்க் கலம்பகம்
- அடைக்கல நாயகி வெண்கலிப்பா
- கிளாவிஸ் இலத்தீன் இலக்கணம்
- தொன்னூல் விளக்கம்
- செந்தமிழ் இலக்கணம்
- தேம்பாவணி

முனிவர் திருக்குறளைப் போற்றியமைக்கு ஒரு சான்று

வீரமாமுனிவர் திருவள்ளுவர் மீதும் குறள் மீதும் கொண்ட ஈடுபாட்டைத் தொன்னூல் விளக்கத்தின் பொருளதிகாரத்தில் பதிகம் பற்றிப் பேசும்போது சூத்திரம் 149இல் அவர் கூறுவது நன்கு விளக்கும். அது வருமாறு:

“ இதற்கெல்லாம் உதாரணம் ஆகும்படி திருவள்ளுவ நாயனார் பயன் ஒன்றெடுத்துத், தேற்றப் பொருள் வகைக்கு இயற்றமிழாய் விரித்துரைப்பப் பதிகமாவது. எவ்வகை நூலும் கல்லாது உணரவும், சொல்லாது உணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகிய ஒரு மெய்க்கடவுள் தன் திருவடிமலரே தலைக்கு அணியெனக் கொண்டேத்தி, இருள் இராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும், மாலைச் சுரத்து அரிதலர்ந்த பதுமம் போலவும், மெய்யாம் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின் கண்ணும், கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எறிப்பத் தெளிந்துணர்ந்து, எங்கும் ஒரு விளக்கென நின்று உயர்ந்த திருவள்ளுவர் உரைத்த பலவற்றுள் ஒன்றை நான் தெரிந்து உரைப்பத் துணிந்தேன்.

அந் நாயனார் தந்த பயன் என்னும் பெருங்கடல் ஆழத்தில் மூழ்கி, ஆங்குடை அருமணி எடுத்து ஒரு சிறு செப்பில் அடைத்தாற்போலத், திருவள்ளுவரது பயனெல்லாம் விரித்துப் பகரும்படி நான் வல்லவன் அல்லேன். ஆகையின், அக்கடற்றுறை சேர்ந்து ஒரு மணியெடுத்துக்காட்டல் உணர்ந்தேன். அவர் சொன்ன குறளின் ஒன்றே இங்ஙனம் நான் விரித்துரைப்பத் துணிந்தேன். அஃதாவது, *மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன், ஆகுல நீர பிற* என்பது. இல்லறம் துறவறம் என்றிவ் விரண்டினுள்ளும் அடங்கி நிற்கும், எல்லா அறங்களும், மனத்தின் தூய்மையாற் பெறும் பெருமையே தருமம் எனவும், மனத்தினுள் மாசு கொண்டவன் செய்யும் தவமும் தானமும், மற்றை யாவும் அறத்தின் அரவம் ஆவதன்றி, அறத்தின் பயனுள அல்ல எனவும், அக்குறள் இருபயன் இவை என விரித்துக் காட்டுதும். விரிப்பவே, மெய்யும் பொய்யும் விளக்கி, உட்பயன் தரும் மெய்யறத்தின் தன்மையே வெளியாய், இஃதொன்று உணர்ந்து நாம் அதற்கு ஒப்ப நடந்தால், இது ”

வீடு எய்தும் வழியெனக் காணப்படும். பெரும் பொருள் நேர்ந்து பொய்ம்மணி கொள்வது கேடு அன்று ஆயினும், பொருளை நேர்ந்தும், உடலை வாட்டியும் உயிரை வருத்தியும் மேற்கதி வீட்டிற் செல்லாச் சில பொய் அறங்களை ஈட்டுவது, அதிலும் கேடு ஆம் அன்றே...

முனிவரின் நூல்களில் திருக்குறள் பயிலும் இடங்கள்

வேதியர் ஒழுக்கம் நூலில் திருக்குறளின் பயன்பாடு

இந்த நூலில் *கண்ணுடையர்* (குறள் 393), *அஞ்சுவது* (குறள் 428), *அகர முதல* (குறள் 1), *தன்குற்றம்* (குறள் 436), *சொல்லுக* (குறள் 645) ஆகிய குறள்கள் முறையே 4,9,16 என்னும் அதிகாரங்களிலும், 3,6 என்னும் சோதனைகளிலும் வருகின்றன.

திருக்கடையூர் நிருபத்தில் திருக்குறளின் பயன்பாடு

இதில் *நன்றே தரினும்* (குறள் 113), *எனைப்பகை* (குறள் 207), *பல்லார்பகை* (குறள் 450) என்னும் மூன்று குறள்கள் வருகின்றன.

பரமார்த்த குருவின் கதையில் திருக்குறளின் பயன்பாடு

தமிழ் மொழியை வெளிநாட்டவர் எளிதாகக் கற்கும் வண்ணம் நகைச்சுவையோடு பேச்சுத் தமிழில் வீரமாமுனிவர் படைத்த பரமார்த்த குருவின் கதை என்னும் நூலில் *அறத்தால் வருவதே இன்பம்* (குறள் 39) என்னும் குறள் வருகிறது.

தமிழ்-இலத்தீன் அகராதியில் திருக்குறளின் பயன்பாடு

இந்நூலில் *அகர முதல* (குறள் 1) என்னும் செய்யுள் அகரத்திலும், *யாகாவாராயினும்* (குறள் 127) என்பது *காக்கிறது* என்ற சொல்லிலும் வருகின்றன.

திருக்காவலூர்க் கலம்பகம் நூலில் திருக்குறளின் பயன்பாடு

“ **யாழ்குரலே இனிதென்னா ஈன்றாட்டுத் தன்மகன்சொல்**
தாழ்குரலே இனிதென்ற தகைமைத்தோ மனமிரங்கி ”

என்ற தாழிசைப் பாடலில் *குழலினிது* (குறள் 66) என்னும் பாடல் ஒலிப்பதைக் கேட்கலாம்.

அடைக்கல நாயகி வெண்கலிப்பா நூலில் திருக்குறளின் பயன்பாடு

“ தேம்பியழும் கண்அருவி திருக்கையால் துடைத்தனையே
ஓம்பியழுந் திட்டனபல் உயிர்வடுஉள் ஆற்றினையே ”

என்னும் பாடலில் *தீயினால் சுட்டபுண்* (குறள் 129) என்னும் பாடல் மிளிர்வதைக் காணலாம்.

கிளாவிஸ் இலத்தீன் இலக்கணத்தில் திருக்குறளின் பயன்பாடு

இந்நூலில் 14 குறள்கள் வருகின்றன. அவை வருமாறு:

- அகர முதல (குறள் 1)
- கற்றதனால் (குறள் 2)
- சிறைகாக்கும்(குறள் 47)
- கொன்றன்ன (குறள் 109)
- யாகாவா (குறள் 127)
- பிறர்க்கின்னா (குறள் 310)
- வியவற்க (குறள் 439)
- பல்லார் (குறள் 450)
- நிலத்தியல்பால் (குறள் (452)
- கடல் ஓடா (குறள் 496)
- சலத்தால் (குறள் 660)
- ஒலித்தக்கால் (குறள் 763)
- ஏரினும் (குறள் 1038)
- எற்றிற்கு (குறள் 1080)

இவற்றுள் கடல் ஓடா இருமுறை வருகிறது. *அகர முதல, கற்றதனால்* ஆகிய இரண்டு மட்டும் இலத்தீன் மொழியாக்கம் பெறுகின்றன.

தொன்னூல் விளக்க நூலில் திருக்குறளின் பயன்பாடு

இந்த நூலில் 28 குறள்கள் வருகின்றன.

செந்தமிழ் இலக்கணம் நூலில் திருக்குறளின் பயன்பாடு

27 குறள்கள் இந்நூலில் வருகின்றன. அவற்றுள் பெரும்பான்மையும் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தேம்பாவணியில் திருக்குறளின் பயன்பாடு

தலைசிறந்த காப்பியமாகிய தேம்பாவணியில் 74 குறள்கள் பயின்று வருகின்றன. சில குறள்கள் பல முறை எடுத்தாளப்பட்டுள்ளன.

தமிழ்ப் பணி

இதனையும் பார்க்க: வீரமாமுனிவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
மற்றும் வீரமாமுனிவர் நூல்களில் திருக்குறள்

இவர் தமிழகம் வந்தபின், சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்று, இலக்கியப் பேருரைகள் நடத்துமளவுக்குப் புலமை பெற்றார்.

இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால்; "சுவடி தேடும் சாமியார்" எனவும் அழைக்கப்பட்டார். இவற்றில் காண அரிதான பல பொக்கிசங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழின் சிறப்பை மேல் நாட்டார் உணர திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல்ஆத்திசூடிபோன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழியில் வெளியிட்டார்.

தமிழ் கற்க ஏதுவாகத் தமிழ் - லத்தீன் அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ்-போத்துக்கீய அகராதியை உருவாக்கினார்.

சதுரகராதியை, நிகண்டுக்கு ஒரு மாற்றாகக் கொண்டு வந்தார்.

அக்காலத்தில் சுவடிகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமலே எழுதுவது வழக்கம். புள்ளிக்குப் ஈடாக நீண்ட கோடிருக்கும். மேலும் குறில், நெடில் விளக்க என்று "ா ா ா ா" சேர்த்தேழுதுவது வழக்கம். "ஆ" என எழுத "அர" என 2 எழுத்துகள் வழக்கிலிருந்தது. (அ:அர, எ:எர) இந்த நிலையை மாற்றி "ஆ, ஏ" என மாறுதல் செய்தவர் இவர்.

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்து வந்தன. அவற்றை மக்கள் எளிதில் படித்தறிய முடியவில்லை என்பதனை உணர்ந்து உரைநடையாக மாற்றியவர் இவர்.

பிற தமிழ் படைப்புகள்

- தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களை 370 நூற்பாக்களில் எடுத்துரைத்தார்.
- கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில், தமிழில் முதல்முதலாகப் பேச்சுத்தமிழை விவரிக்க முனைந்தவர். வழக்கும் செய்யுளுமே ஒரு மொழியின் இலக்கணமாக அமையுமென்றாலும், இரட்டை வழக்கு மொழியான தமிழில், பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் அமைந்திராத காலத்தில் கொடுந்தமிழ் இலக்கணம் வகுத்தது சிறப்பான முயற்சி எனல் வேண்டும்.
- திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தவர் வீரமாமுனிவர். உரைநடையில்

1. வேத விளக்கம்,
2. வேதியர் ஒழுக்கம்,
3. ஞானக் கண்ணாடி,
4. செந்தமிழ் இலக்கணம்,
5. பரமார்த்த குருவின் கதை,
6. வாமன் கதை

ஆகிய நூல்களைப் படைத்தார்.


- திருக்காவல் ஊர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை இவரது பிற நூல்கள்.
- 1728-இல் புதுவையில் இவரின் "பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் இவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நகைச்சுவைக் கதைகள் Jean de la Fontaine (1621-1695) எனும் பிரன்சியரால் எழுதப்பட்டது. ஐரோப்பாவில் பிரபலமாக இருந்ததை பெசுக்கி தமிழிலும் மொழிபெயர்த்தார் என்று சிலர் கருதுகின்றனர். இது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும்.
- காவியத்தில் தேம்பாவணி இவர் இயற்றியது. மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு மொத்தமாக 3615 விருத்தம்|விருத்தப் பாக்களால் ஆனது இந்தக் காவியம். இதிலும் ஒரு சிறப்பு இருக்கிறது. பின்னிணைப்பாக யாப்பு வடிவங்களை அளித்திருக்கிறார். தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம் உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைத்தாரல்லர்

தமிழ்ப் பணி

தனித்தமிழ்

அன்றைய காலகட்டத்தில் தமிழில் உரைநடை நூல்களில் கூட எதுகை மோனையோடு கூடிய வாக்கிய அமைப்புகளும், வடமொழிக்கலப்போடு அமைந்த மணிப்பிரவாள நடையும் பரவலாக இருந்தது. வீரமாமுனிவர் எளிய தமிழ் சொற்களைத் தெளிவான தொடராக்கி உரைநடை வகுத்தார். இவ்வகையில் தனித்தமிழ் இயக்கத்துக்கான முதல் முன்னோடியாக இருந்திருக்கிறார்.

அகராதிகள்


வீரமாமுனிவர் அருளிச்செய்த

சதுரகராதி

இஃதுடன்

அனுபந்த அகராதி.

குப்புசாமிமுதலியாரால்

க, ம, பச்சையப்ப நாயகரவர்களால்

வெண்பேடு.

கோவிந்துநாயகரவர்களது

வேதவிநாயகர் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சதுரகராதி

சொற்களுக்கு பொருள் விளக்கும் நூல்கள் அக்காலத்தில் தமிழில் நிகண்டுகள் என்னும் மனப்பாடம் செய்வதற்குரிய வகையில் செய்யுள்களாக இருந்தன. அகரவரிசைப்படுத்தப்பட்ட சொற்களுக்கான விளக்கம் தரும் அகராதி என்னும் முறை உருவாகி வந்தது. ஐரோப்பாவில் பதினேழாம் நூற்றாண்டில் உலக மொழிகள் பலவற்றிலும் சொற்பொருள் விளக்கும் அகராதிகள் எழுதப்பட்டன. இந்த அகராதித்துறை மறுமலர்ச்சி நிகழ்ந்த காலத்தில் தமிழகம் வந்த வீராமாமுனிவர் 1732-ல் சதுரகராதி என்னும் தமிழ்-தமிழ் அகராதியை தொகுத்து எழுதினார். ஆங்கிலத்தில் வெகுகாலம் புகழ்பெற்றிருந்த சாமுவெல் ஜான்சன் அகராதி (1755) வெளிவருவதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னரே சதுராகராதி எழுதப்பட்டுவிட்டது. சதுராகராதி என்றால் நான்கு வகைப்பட்ட அகராதிகள் எனப் பொருள். அவை:

- பெயரகராதி - ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் கொடுக்கப்பட்டிருக்கும்,
- பொருளகராதி - ஒரு பொருளுக்குரிய பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கும் தொகையகராதி - இருசுடர், முக்குணம், நாற்படை என்பது போன்ற தொகையைக் குறிக்கும் சொற்களுக்கான விளக்கத்தைக் காணலாம்
- தொடையகராதி - செய்யுள்களில் புழங்கும் எதுகை மோனை சொற்கள் வரிசையாக தொகுக்கப்பட்டிருக்கும்.

திவாகர நிகண்டு போன்ற நிகண்டுகளில் இருந்து முக்கியமான சொற்களைத் திரட்டி சதுரகராதி எழுதப்பட்டிருக்கிறது. இதனைப் பின் தொடர்ந்தே பல தமிழகராதிகள் பின்னர் எழுதப்பட்டன.

வீரமாமுனிவர் ஐரோப்பாவில் இருந்து வந்து தமிழ் கற்பவர்களுக்கு வசதியாக தமிழ்-லத்தீன் அகராதியை 1744-ல் உருவாக்கினார். அதில்

1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் இடம்பெற்றது. கொடைக்கானல் மலைமீது அமைந்த செம்பகனூர்ப் பழஞ்சுவடி நூலகத்தில் வீரமாமுனிவர் இயற்றிய தமிழ்-லத்தீன் அகராதிப் பிரதி ஒன்று உள்ளது. பழங்கால ஏடு வடிவில் அமைந்த அந்த அகராதியில் பின்னிணைப்பாக வீரமாமுனிவர் பரமார்த்த குருவின் கதை என்னும் புனைவை இணைத்துள்ளார். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ்-போர்த்துகீசிய அகராதியை உருவாக்கினார்.

தமிழ் இலக்கணம்

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார். இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத்தமிழுக்குமான வேறுபாடுகளை ஆராய்ந்து தனித்தனியே செந்தமிழ் இலக்கணமும் கொடுந்தமிழ் இலக்கணமும் எழுதினார். கொடுந்தமிழ் இலக்கணம் வழியாக தமிழில் முதல் முதலாகப் பேச்சுத் தமிழை விவரிக்க முனைந்தவர். இரட்டை வழக்கு மொழியான தமிழில், பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் எழுதப்பட்டிருக்காத காலத்தில் கொடுந்தமிழ் இலக்கணம் வகுத்தது ஒரு முன்னோடி முயற்சி.

எழுத்துச் சீர்திருத்தம்

வீரமாமுனிவர் காலத்தில் ஆகாரத்தை எழுதும் பொழுது அகரத்தின் மேல் புள்ளியிட்டு எழுதியதை விடுத்து அகரத்திற்கு சுழியிட்டு ஆகாரத்தை எழுதினார் [அ் => ஆ]. "எ" என்னும் எழுத்து குறிலாகவும் நெடிலாகவும் உபயோகிக்கப் பட்டது. வீரமாமுனிவர் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு காண்பிக்க எகரத்தில் வருகின்ற மேல் கோடு நீட்டிச் சுழித்தால் அதை நெடிலாக ஒலிக்கலாம் என்று சீர்திருத்தம் கொணர்ந்தார். ஆனால் அச்சீர்திருத்தம் தற்போது வழக்கத்தில் இல்லை. அவர் இயற்றிய தமிழ்-இலத்தீன் அகராதி (1744) முழுவதிலும் "ஏ" என்னும் எழுத்தை "எ" என்றே எழுதியுள்ளார். [எ் => எ]

ஒகரத்தையும் ஓகாராத்தையும் வேறுபடுத்த வீரமாமுனிவர் ஒகரத்தின் கீழே சுழி சேர்த்து அதை நெடிலாக்கினார். [ஒ் => ஓ]. உயிர்மெய் எழுத்துக்களிலும் இதே போன்ற மாற்றங்களைக் கொண்டுவந்தார். [தெ்ன் => தேன், தெர்ல் => தோல்]

உயிரெழுத்திலும் உயிர்மெய்யெழுத்திலும் வீரமாமுனிவர் கொணர்ந்த எகர ஒகர சீர்திருத்தத்தை ஆட்சியாளரும், அச்சுத்துறையினரும் ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வந்ததால் அச்சீர்திருத்தம் நிலைபெற்று, அனைவரும் மேற்கொள்ளும் வழக்கமாக வந்துவிட்டது. தாம் செய்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி வீரமாமுனிவரே தமது தமிழ்-லத்தீன் அகராதியின் முன்னுரையில் 15-ம் பத்தியில் விளக்கியுள்ளார்.

வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத்தத்தின் சிறப்பை ஆய்வாளர் ச. ராஜமாணிக்கம் கீழ்வருமாறு விவரிக்கிறார்:

"தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழ் எழுத்துக்களை எவராலும் மாற்ற முடியவில்லை. வெளிநாட்டில் பிறந்து, ஏலாக்குறிச்சி என்ற சிற்றூரில் பாமர மக்களிடையே பணிபுரிந்த வீரமாமுனிவர், இத்தகைய சீர்திருத்தத்தைச் செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தது, செயற்கரிய செயலாகும். வேறொன்றும் செய்யாமல், இஃது ஒன்றை மட்டும் செய்திருந்தாலே, அவருக்குத் தமிழில் சிறந்த இடம் கிடைத்திருக்கும்."[1]

மருத்துவ நூல்கள்

இவர் பல மருத்துவ நூல்களை எழுதியுள்ளதாக குறிப்புள்ளது. இந்நூல்கள் பாடல் வடிவில் உள்ளன.

1. நசகாண்டம்
2. நவரத்தின சுருக்க மாலை

3. மகா வீரிய சிந்தாமணி
4. வைதிய சிந்தாமணி
5. சுரமஞ்சரி
6. பூவரசங்காய் எண்ணெய்
7. மேகநாதத்தைலம் கலிவெண்பா
8. பஞ்சாட்சர மூலி எண்ணெய்(ஆனந்தகளிப்பு)
9. சத்துருசங்கார எண்ணெய்(நொண்டிச் சிந்து)
10. வீரமெழுகு
11. முப்புசூத்திரம்(நொண்டிச் சிந்து)
12. அனுபோகவைத்திய சிகாமணி
13. வீரிய சிந்தாமணி இரண்டாம் பாகம்
14. குணவாடகம்
15. நிலக்கண்ணடாடி

வீரமாமுனிவரின் தமிழ்க் கையெழுத்து

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%88%E0%AE%AF%E0%AF%86%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81

வீரமாமுனிவரின் தமிழ்க் கையெழுத்து என்னும் இக்கட்டுரை ”இத்தாலியத் தமிழ் வித்தகர்” என்னும் சிறப்புப் பெயர் பெற்ற தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் (1680-1747) கைப்பட எழுதிய சில மூல ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது. இது குறித்த ஆய்வை மேற்கொண்ட முனைவர் சி. இராசமாணிக்கம் அவர்களின் முடிவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

செம்பகனூர்ப் பழஞ்சுவடி நூலகக் கண்டுபிடிப்பு

தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் கல்விப் பணி புரிவதில் ஊக்கமுடம் செயல்பட்டு வருகின்ற கிறித்தவக் குழுவினருள் **சேசு சபை** துறவிகள் சிறப்பிடம் வகிக்கின்றனர். தலைசிறந்த தமிழறிஞரான வீரமாமுனிவர் சேசு சபைத் துறவியாகவே இந்திய நாட்டை வந்தடைந்து, தமிழகத்தில் பணியாற்றினார். சேசு சபையினருக்கு உரித்தான செம்பகனூர்ப் பழஞ்சுவடி நூலகத்தில் முனிவரின் நூல்கள் தம் மூல வடிவத்தில் உள்ளன.

கொடைக்கானல் மலைமீது அமைந்த செம்பகனூர்ப் பழஞ்சுவடி நூலகத்தில் வீரமாமுனிவர் இயற்றிய தமிழ்-இலத்தீன் அகராதிப் பிரதி ஒன்று உள்ளது. பார்த்தாலே பழங்கால ஏடு என்ற முறையில் அதன் தோற்றமும் வடிவும் அமைந்துள்ளன. அந்த ஏட்டில் அகராதிப் பகுதிக்குப் பின்னிணைப்பாக வீரமாமுனிவர் பரமார்த்த குருவின் கதை என்னும் புனைவை இணைத்துள்ளார்.

இந்த அகராதி நூலை முனிவர் 1744இல் (அதாவது தாம் இறப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னால்) இயற்றினார். ஆனால் பரமார்த்த குருவின் கதையை அவர் ஏற்கெனவே 1728இல் எழுதிய "வேத விளக்கம்" என்னும் நூலில் பயன்படுத்தியிருந்தார். ஆகவே அக்கதை 1728க்கு முன் தோன்றியிருக்க வேண்டும். முனிவர் அதைச் செம்மைப்படுத்தி, 1744இல் இயற்றிய தமிழ்-இலத்தீன் அகராதியில் இணைத்திருப்பார் என்று தெரிகிறது.

அகராதி என்றால் சொல்லுக்குச் சொல் பொருள் தருகின்ற கருவி என்பது இன்றைய பார்வை. ஆனால், வீரமாமுனிவர் தாம் வகுத்த அகராதியில் தரும் சொற்கள் எவ்வாறு பயன்பாட்டில் வருகின்றன என்பதை எடுத்துக்கூற விரும்பினார். எனவே, நகைச்சுவை மிகுந்த பரமார்த்த குருவின் கதையைப் பின்னிணைப்பாக அளித்தார்.

தாம் இயற்றிய பரமார்த்த குருவின் கதையை வீரமாமுனிவரே இலத்தீனிலும் மொழிபெயர்த்தார். முனிவர் அக்கதையை ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு பாதி தமிழும் மறு பாதி அதன் மொழிபெயர்ப்பாக இலத்தீனும் என்று அமைத்தார். அக்கதையைத் தமிழ்-இலத்தீன் அகராதியின் பின்னிணைப்பாகப் பதித்தார். இலத்தீனில் அமைந்த பரமார்த்த குரு கதைப் பகுதியின் கையெழுத்தும், முனிவர் தம் கைப்பட இலத்தீன் மொழியில் எழுதி

உரோமைக்கு அனுப்பிய கடிதங்களில் காணப்படும் கையெழுத்தும் ஒன்றே என்பதை இராசமாணிக்கம் கண்டறிந்தார்.

அதுபோலவே, தமிழ்-இலத்தீன் அகராதியில் வருகின்ற கையெழுத்து எழுத்தர் ஒருவரின் கையெழுத்தாக இருந்த போதிலும், அதில் வருகின்ற எண்ணற்ற திருத்தங்கள் வீரமாமுனிவரே கைப்படச் செய்தவை என்பதும் புலனாயிற்று. மேலும், இத்திருத்தங்களில் முதலில் தமிழ்ச்சொல் வர, அதன் விளக்கம் அதே கையெழுத்தில் இலத்தீனில் வந்தபடியால், முனிவரது தமிழ்க் கையெழுத்து பிடிபட்டது.

இதே தமிழ்க் கையெழுத்தில் பரமார்த்த குருவின் ஆறாம் கதை அமைந்திருப்பதும், அதே கையெழுத்தில் இலண்டனில் உள்ள சுவடியில் தேம்பாவணி மூலமும் உரையும் அமைந்திருப்பதும் தெளிவாயிற்று.

வீரமாமுனிவரின் தமிழ்க் கையெழுத்து அடங்கிய நூல் மூலங்கள்

ஆகவே, நம்மிடம் வீராமாமுனிவரின் (இலத்தீன் மற்றும்) தமிழ்க் கையெழுத்து அடங்கிய கீழ்வரும் மூலங்கள் கிடைத்துள்ளன:

- முனிவர் கைப்பட எழுதி உரோமைக்கு அனுப்பிய இலத்தீன் கடிதங்கள்
- தேம்பாவணி மூலமும் உரையும்
- பரமார்த்த குருவின் ஆறாம் தமிழ்க் கதை
- பரமார்த்த குருவின் கதைகள் 2, 3, 4, 5, 6, இலத்தீன் மொழியில்.

தமிழக அரசின் தடயவியல் துறை வழங்கிய சான்று

வீரமாமுனிவரின் தமிழ்க் கையெழுத்தும் இலத்தீன் கையெழுத்தும் நம்மிடம் கிடைத்திருப்பதை உறுதிசெய்யும் வண்ணம் அறிஞர் இராசமாணிக்கம் அவர்கள் தமிழக அரசின் தடயவியல் துறையினரிடம் ஏடுகளை அளித்து சோதனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அவர்களும் பல மாதங்களாக ஆராய்ந்து, அவை முனிவர் கைப்பட எழுதியவையே என்று சான்றிதழ் அளித்தனர்.

ஆய்வு முடிவுகள்

இராசமாணிக்கம் அவர்களின் ஆய்விலிருந்து தெரிய வருபவை:

- வீரமாமுனிவர் கைப்பட எழுதிய ஏடுகளாக நம்மிடம் இருப்பவை அவர் உரோமைக்கு இலத்தீனில் எழுதிய கடிதங்கள்;
- அவர் பாடிய தேம்பாவணி அவர்தம் கையெழுத்தில் உள்ளது;
- அவர் இயற்றிய தமிழ்-இலத்தீன் அகராதியும் அதன் பின்னிணைப்பாக அவர் சேர்த்த பரமார்த்த குருவின் கதையும் பெருமளவில் அவர்தம் இலத்தீன் மற்றும் தமிழ்க் கையெழுத்தில் உள்ளது.

இலக்கிய வாழ்க்கை

மத போதனைக்காக சுப்பிரதீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்று பின்னர் தமிழில் நூல்கள் இயற்றும் அளவு புலமை பெற்றார். இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால் 'சுவடி தேடும் சாமியார்' எனவும் அழைக்கப்பட்டார்.


தேம்பாவணி
முதற்காண்டம்
வீரமாமுனிவர்

தேம்பாவணி

தேம்பாவணி என்னும் செய்யுள் நூலை இயற்றினார். மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு 3615 விருத்தப் பாக்கள் கொண்டது இந்நூல். இயேசுநாதரின் தந்தையாகிய சூசையப்பரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட செய்யுள். விவிலியத்தில் இருந்து சில பகுதிகளும், ஏசுவின் வாழ்க்கையோடு மரபாக வரும் சில கதைகளுடன், திருச்சபையின் கொள்கைகளும், வழிபாட்டு முறைகளும் கதை வடிவமாகவும், தத்துவ வடிவமாகவும் இதில் இடம்பெற்றுள்ளன. தமிழ்க் காப்பிய மரபைப் பின்பற்றி நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவற்றை இந்நூலில் அமைத்துள்ளார். பாலஸ்தீன் நாடும் ஜெருசெலம் நகரும் வர்ணிக்கப்பட்டாலும் தமிழின் ஐந்திணை நிலங்களாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற இலக்கியங்களின் கருத்துக்களை எடுத்துக் கையாண்டிருக்கிறார்.

இதில் பின்னிணைப்பாக இந்நூலில் பயன்படுத்திய விருத்தங்களையும் சந்தங்களையும் அட்டவணைப்படுத்தியிருக்கிறார். தமிழில் பக்தி இயக்கம் உருவாக்கி புகழ் பெற்றிருந்த அழகியலைத் தேம்பாவணியில் வீரமாமுனிவர் பின்பற்றியிருக்கிறார். பதினேழாம் நூற்றாண்டில் இந்தியா வந்து சேர்ந்த கிறிஸ்தவம் இங்குள்ள மேல்தட்டு மக்களுடனும் மதத்துடனும் உரையாட முயன்றதன் ஒரு உதாரணம் தேம்பாவணி.

வீரமாமுனிவர் கலம்பகம், அந்தாதி போன்ற வகைமையை சேர்ந்த நூல்களையும் இயற்றியிருக்கிறார். இந்திய ராகங்களில் அமைந்த இசைப்பாடல்களும் இயற்றியிருக்கிறார்.

திருக்குறளை ஆழ்ந்து கற்று அவருடைய பல ஆக்கங்களில் அதன் கருத்துக்களைக் கையாண்டுள்ளார். காமத்துப்பாலைத் தவிர்த்து அறத்துப்பாலையும், பொருட்பாலையும் லத்தீனுக்கு மொழியாக்கம்

செய்தார். அம்மொழியிலேயே ஒவ்வொரு குறளுக்கும் விளக்கம், அருஞ்சொற்பொருள் ஆகியவற்றை அளித்தார். இப்படைப்பை ஜி.யு. போப் வெளியிட்டுள்ளார்.

இவர் இயற்றிய பரமார்த்த குரு கதைகள் குழந்தை இலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க ஆக்கம். பரமார்த்த குருவின் கதையை வீரமாமுனிவரே இலத்தீனிலும் மொழிபெயர்த்தார். அக்கதையை ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு பாதி தமிழும் மறு பாதி அதன் மொழிபெயர்ப்பாக இலத்தீனும் என்று அமைத்தார். அக்கதையைத் தமிழ்-இலத்தீன் அகராதியின் பின்னிணைப்பாகவும் பதித்தார்.

1742-ல் ஓய்வு பெற்று, அகராதிகளையும் இலக்கண நூல்களையும் எழுதினார்.

படைப்புகள்

வீரமாமுனிவர் எழுதிய நூல்களில் சில:

காப்பியம்

- தேம்பாவணி - காப்பிய நூல்

அகராதி நூல்கள்

- சதுரகராதி
- தமிழ்-லத்தீன் அகராதி
- தமிழ்-போர்த்துகீசிய அகராதி

உரைநடை நூல்கள்

- பரமார்த்த குருவின் கதை - நகைச்சுவைக் கதைகள்
- வாமன் கதை

இலக்கண நூல்கள்

- கிளாவிஸ் லத்தீன் இலக்கணம்
- தொன்னூல் விளக்கம்
- செந்தமிழ்
- கொடுந்தமிழ்

சமய நூல்கள்

- வேதியர் ஒழுக்கம் - சமயத் தொண்டர்களுக்காக எழுதப்பட்ட உரைநடை நூல் (கன்னடத்திலும் தெலுங்கிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது)
- ஞானக் கண்ணாடி (கன்னடத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டது)
- வேத விளக்கம்
- பேத மறுத்தல்

பிற இலக்கிய வகைமைகள்

- திருக்காவலூர்க் கலம்பகம்
- அன்னை அழுங்கல் அந்தாதி
- கித்தேரியம்மாள் அம்மானை
- கலி வெண்பா
- அடைக்கல மாலை
- அடைக்கல நாயகி வெண்கலிப்பா

வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாறு

https://www.astroved.com/tamil/blog/veeramamunivar-tamil/

முன்னுரை:

இவரது இயற் பெயர் கான்சுடான்சோ பெசுக்கி. இவர் இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என்னும் இடத்தில்

பிறந்தார். இவர் இத்தாலிய நாட்டு கிறிஸ்துவ மத போதகர் ஆவார். கிறித்தவ சமயத் தொண்டுக்காகத் தமிழகம் வந்து, தமிழின் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு, தமிழ்த் தொண்டராகவும் தமிழறிஞராகவும் மாறிவிட்ட அவரது வாழ்வையும் பணியையும் பற்றிக் காண்போம்.

பெயர்மாற்றம்

மறை பரப்பு முயற்சிக்காக முதலில் தமிழைக் கற்றுக்கொண்ட இவர், தமிழில் வியத்தகு புலமை பெற்று இலக்கணம், இலக்கியம், அகராதி படைத்து தமிழுக்குச் செழுமையூட்டினார். தமது பெயரினை **"தைரியநாதசாமி"** என்று முதலில் மாற்றிக் கொண்டார். பின்னர், அப்பெயர் **"வடமொழி"** என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும், தமது இயற்பெயரின் பொருளைத் தழுவிச் செந்தமிழில் **"வீரமாமுனிவர்"** என மாற்றிக் கொண்டார்.



தோற்றத்தில் மாற்றம்

வீரமாமுனிவர் பெயர் மாற்றம் செய்து கொண்டதோடு, இந்நாட்டில் இருந்த சமயத் தொண்டர்களைப் போலவே, தாமும் நெற்றியில் சந்தனம் பூசி, காதில் முத்துக் கடுக்கன் அணிந்து, காவி அங்கி உடுத்தி, புலித்தோல் பதிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொண்டார். இப்படி, தோற்ற மாற்றம் செய்துகொண்டது மட்டுமல்ல, காய்கறி

உணவை மட்டுமே உண்டு, சைவ உணவினராகவும் மாறிவிட்டார். தமிழின் மீது இவருடைய பற்றை என்னென்பது! தோற்றத்தில் மட்டுமின்றி, உணவு முறையிலும் மாறியது மேலும் சிறப்பானது.

தமிழகத்தில் வீரமாமுனிவர்

1710 ஜூன் மாதம் கிறித்தவ மதப் பரப்புப் பணி செய்ய கோவா வந்து சேர்ந்தார்.சில நாட்கள் கோவாவில் தங்கியவர், தமிழ்நாடு செல்லத் திட்டமிட்டு, கொச்சி வந்து அங்கிருந்து கால்நடையாக அம்பலக்காடு வந்து தங்கி மதுரையில் காமனாயக்கன் பட்டி வந்து சேர்ந்தார். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப "தேம்பாவணி என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளது.

ஆலயப் பணிகள்

தமிழகத்தில் பல மாவட்டங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களைக் கட்டியுள்ளார். கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் முகாசபரூர் பாளையக்காரரின் உதவிகொண்டு புனித பெரிய நாயகி அன்னைக்கு திருத்தலம் கட்டி எழுப்பியவர் வீரமாமுனிவர். கோனான்குப்பம் புனித பெரியநாயகி அன்னைக்குத் தமிழ் கலாச்சாரப்படி அன்னை மாமரிக்குப் புடவை உடுத்தியபடி மரத்தாலான சுரூபங்களைச் செய்து அன்னையின் பெருமையும் புகழும் உலகறியச் செய்துள்ளார் வீரமாமுனிவர். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டத்தில் உள்ள தவளப்பள்ளம் கிராமத்தில் புனித பெரியநாயகி அன்னை ஆலயம், ஆவூர் கிராமத்தில் புனித பெரியநாயகி அன்னை ஆலயம், கடலூர் மாவட்டம் கோனான்குப்பம் கிராமத்தில் புனித பெரியநாயகி அன்னைக்கு ஆலயம், ஏலாக்குறிச்சி கிராமத்தில் புனித அடைக்கல

அன்னை ஆலயம் ஆகியவற்றைக் கட்டி உள்ளார். இவர் கட்டியுள்ள அனைத்து ஆலயங்களும் ஒரே வடிவில் இருக்கிறது. இவர் கட்டி எழுப்பியுள்ள ஆலயத்திற்குல் ஐம்பது பேர் மட்டுமே அமரலாம்.

பன்மொழிப் புலமை

தத்தம் தாய்மொழியிலே புலவர்கள் பல்வேறு இலக்கியங்களைப் படைப்பது பொதுவழக்கு. தமது தாய்மொழி யல்லாத பிறமொழிகளை அறிஞர்கள் கற்று அதில் ஆழ்ந்த புலமை பெறுவதும் உலகில் காணக்கூடியதே. எனினும் ஒருவருக்குத் தம் தாய்மொழியல்லாத பிறமொழியில் இலக்கியம், இலக்கணம், அகராதி முதலிய அனைத்துத் துறைகளிலும் அரிய நூல்கள் பல படைக்கும் அளவுக்கு ஆற்றலும் அரும் புலமையும் அடைவது மிகமிக அரிய செயலாகும். செயற்கரிய அச்செயலைச் செய்து, உலக வரலாற்றிலேயே தனித்து நிற்பவருள் ஒருவராக வீரமாமுனிவர் திகழ்கிறார்.

அகராதி மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள்

கான்ஸ்டன்டைன் முதல் தமிழ் அகராதியைத் தொகுத்தார் – ஒரு தமிழ்–லத்தீன் அகராதி. அவர் விரிவான சதுரகராதியையும் தொகுத்துள்ளார், இது சொற்கள், ஒத்த சொற்கள் மற்றும் ரைம்களின் வகைகளைக் கொண்ட நான்கு மடங்கு அகராதியாகும். தமிழ்–லத்தீன், தமிழ்–போர்த்துகீசியம் மற்றும் தமிழ்–தமிழ் ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு தமிழ் இலக்கணங்களையும் மூன்று அகராதிகளையும் பெஸ்சி இயற்றினார்.

திருவள்ளுவரின் காவியமான "திருக்குறள்" லத்தீன் மொழியில் மொழிபெயர்த்து விளக்கினார். இந்த லத்தீன் படைப்பு ஐரோப்பிய அறிவுஜீவிகளின் கண்களைத் திறந்து, தமிழ் இலக்கியத்தில் உண்மையையும் அழகையும் கண்டறிய உதவியது. தேவாரம் , திருப்புகழ், நன்னூல், மற்றும் ஆத்திசூடி போன்ற பல முக்கியமான

தமிழ் இலக்கியப் படைப்புகளை ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்.

இலக்கியத் தமிழ் இலக்கணப் படைப்பை இயற்றுவதைத் தவிர, அவர் தமிழின் பொதுவான பயன்பாட்டிற்கான இலக்கணத்தையும் எழுதினார் (உரை நடை இல்லக்கியம்), இது சில சமயங்களில் அவரை 'தமிழ் உரைநடையின் தந்தை' என்று குறிப்பிடுவதற்கு வழிவகுத்தது.

முன்னதாக தமிழ் எழுத்துக்கள் மெய் எழுத்துக்களுக்கு புள்ளி இல்லாமல் எழுதப்பட்டன, மேலும் நீண்ட உயிரெழுத்துக்களைக் குறிக்க ர என்ற குறியீடு பயன்படுத்தப்பட்டது. தமிழ் மெய் எழுத்துக்களில் (க், ங், ச், ...) புள்ளியிட்டு நீண்ட உயிரெழுத்துக்களை அர என்பதற்குப் பதிலாக ஆ, கர என்பதற்குப் பதிலாக கா, போன்றவற்றை எழுதும் முறையை அறிமுகப்படுத்தியவர் வீரமாமுனிவர்.

இயற்றிய நூல்கள் :

இத்தாலி நாட்டில் பிறந்து, தமது முப்பதாம் வயதிலேயே தமிழகம் வந்த அவர், தமிழில் சிற்றிலக்கியங்கள், இலக்கணம், உரைநடை, அகராதி, இசைப்பாடல்கள் முதலிய பல துறைகளில் நூல்கள் படைத்தார். அதோடு மட்டுமல்லாமல் இலக்கியப் படைப்புகளுள் மிக அரியதாகக் கருதப்படும் தேம்பாவணி எனப்படும் காப்பியம் ஒன்றையும் இயற்றி வெற்றி கண்டுள்ளார். மேலும் அவர் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களையும், சதுரகராதி எனப்படும்
அகராதியையும், தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலையும் எழுதியுள்ளார். இவற்றுள் தொன்னூல் விளக்கம், குட்டித்

தொல்காப்பியம் என அழைக்கப்படும் பெருமையுடையது. இப்படிப் பல்வேறு வகையான நூல்களைப் படைத்த ஒரு புலவரைக் காண்பது, தமிழில் மட்டுமன்று; உலகின் பிற மொழிகளிலும் கூட மிக அரிய ஒன்றாகும்.

சமயப் பணி

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **குருக்கள்பட்டி** மற்றும் **ஏலாக்குறிச்சி, கோனான்குப்பம்** முதலிய பல இடங்களில் சமயத் தொண்டு புரிந்தார். தாம் சமயப்பணி புரிந்த இடங்களிலேயே, பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதி வெளியிட்டார்.

தமிழ்நாட்டுக்கு வந்து தமிழராகவே வாழ்ந்தார் வீரமாமுனிவர்.உலகில் வாழ்ந்த சமய மற்றும் மொழித்தொண்டர்கள் வரிசையிலே இவ்வாறு தமக்கென ஓர் அழியாத, தனித்துவமான இடத்தைத் தேடிக் கொண்டார் பெஸ்கி எனப்பட்ட வீரமாமுனிவர்.

வீரமாமுனிவரின் இறப்பு :

1742இல் மதுரைப் பணித்தளம் விட்டுச்சென்ற வீரமாமுனிவர், கடற்கரையில் 1745 வரை பணிபுரிந்தபின், 1746-47 ஆண்டுகளைக் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காட்டில் அமைந்த குருமடத்தில் செலவழித்து, 1747ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாளில் தமது 67ஆம் வயதில் உயிர்துறந்தார். திப்பு சுல்தான் காலத்தில் நடந்த வேதகலாபனையில் பல கிறித்துவ நிறுவனங்கள் இடம் தெரியாமல் அழிந்து போயின. வீரமாமுனிவரது கல்லறைக்கும் அந்தக் கதி நேர்ந்திருக்கிறது. தமிழுக்கு இவ்வளவு தொண்டு செய்த பெரியார், தமிழ் நாட்டை விட்டுக் கேரள நாடு சென்று செத்ததும், அங்கு அவரை அடக்கம் செய்த கல்லறையும் தெரியாத நிலையில் இருப்பதும், தமிழ்

மக்களுக்கு வருத்தமளிக்கும் செய்திகள். சிலர் இவர் மணப்பாட்டில் இறந்தார் என்றும், வேறு சிலர் மணப்பாறையில் உயிர் துறந்தார் என்றும் கூறுவது வரலாற்றுச் சான்றுக்குப் புறம்பானது. 1746-47 ஆண்டுகளில் கேரள நாட்டு அம்பலக்காட்டில் முனிவர் வாழ்ந்தார் என்பதையும், அங்கே மரித்தார் என்பதையும் அக்கால அதிகாரபூர்வமான அறிக்கையின் வாயிலாக உறுதியாக அறியலாம்.

அங்கீகாரம்:

1968 ஆம் ஆண்டில், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்கான அங்கீகாரமாக, சென்னை நகரின் மெரினா கடற்கரையில், பெஸ்சிக்கு தமிழ்நாடு அரசு ஒரு சிலையை அமைத்தது.

பெஸ்கியின் 300வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், 1980 ஆம் ஆண்டில் அவரது சொந்த இடமான காஸ்டிக்லியோன் டெல்லே ஸ்டிவியேரில் ஒரு சிலை நிறுவப்பட்டது. அதில், தமிழ் மொழியின் டான்டே என்று பெச்சி அழைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


1981 ஜனவரியில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழர் பேரவை சென்னை மாநகரில் அவரது சிலையை நிறுவியது.













பரமார்த்த குருவின் கதை

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%95%E0%AF%81%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88

பரமார்த்த குருவின் கதை (*Guru Paramartha*) என்னும் நூல் வீரமாமுனிவரால் எழுதப்பெற்ற தழுவு நூல் ஆகும். இந்த நகைச்சுவைக் கதைகள் Jean de la Fontaine (1621-1695) எனும் பிரன்சியரால் எழுதப்பட்டது. ஐரோப்பாவில் பிரபலமாக இருந்ததை வீரமாமுனிவர் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப பெயர்த்தார்.

1728-இல் புதுவையில் "பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் முதன்முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இக்கதையில் மிளிர்ந்த நகைச்சுவை, மக்களைப் பெரிதும் கவர்ந்ததால் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற தென்னக மொழிகள் பலவற்றிலும் இது வெளிவந்தது.

நூலின் முக்கியத்துவம்

இது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும். ஆசிரியரின் காலமான 17-ஆம் நூற்றாண்டில், உரைநடையாக்கம் என்பது அரிதாகவே பின்பற்றப்பட்டது. அனைத்துத் தமிழ் வெளிப்பாடுகளும், பெரும்பாலும் கவிதை நடையிலேயே இருந்தன. பாமரரும் பிறரும்

தமிழைக் கற்க, இவரது ஆக்கங்கள் இருந்தன என்பதற்கு இக்கதையே சான்றாகும்.


கதைக் களம்

அதிவிவேக குருவுக்கு மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்ற ஐந்து சீடர்கள். இவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களையே இந்நூல் நகைச்சுவையோடு விவரிக்கின்றது.

சில வரிகள்

பரமார்த்த குருவின் குதிரையை வர்ணித்து எழுதிய கவிதை :

"முன்னே கடிவாளம் மூன்று பேர் தொட்டிழுக்க
பின்னிருந் திரண்டுபேர் தள்ள - எந்நேரம்
வேதம் போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம் போம் காதம் வழி"



வீரமாமுனிவர் அருளிய

சதுரகராதி


(ஆய்வுப் பதிப்பு)

பதிப்பாசிரியர்

டாக்டர் சூ. இன்னாசி

முன்னாள் பேராசிரியர் - தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சந்தியா பதிப்பகம்
ஃப்ளாட் ஏ, நியூடெக் வைபவ்,
57 - 53ஆவது தெரு, அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி : 24896979, 55855704



ͻ னகர உயிர்மெய் மேற்கோடிடப்பெற்றும் இடப்பெறாமலும் உளது.

^ மகர மெய் மேற்புள்ளியிடப்பெற்றும் இடப்பெறாமலும் உளது.

⊐ சகர மெய் மேற்புள்ளியிடப்பெற்றும் இடப்பெறா்மலும் உளது.

⊔ ஊர் என்னும் சொல் உளர் என்பதுபோற்றோன்றுகிறது.



வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி) 18-ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த இத்தாலிய கிறித்தவப் பாதிரியார் மற்றும் தமிழறிஞர். தமிழ் அகராதியின் தந்தை எனப் போற்றப்படும் இவர், முதல் தமிழ்-தமிழ் அகராதியான 'சதுரகராதி' தொகுத்தார். தேம்பாவணி காப்பியம், தமிழ் உரைநடை வளர்ச்சி மற்றும் எழுத்துச் சீர்திருத்தங்களில் பெரும் பங்காற்றியவர்.

வீரமாமுனிவர் - முக்கிய குறிப்புகள்:

- **இயற்பெயர்:** கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi).
- **பிறப்பு:** இத்தாலி, 1680 (நவம்பர் 8).
- **தமிழக வருகை:** 1710-இல் கிறித்தவ மதத்தைப் பரப்ப தமிழகம் வந்தார்.
- **தமிழ்ப் பணிகள்:**
    - **சதுரகராதி:** சொற்களை அகர வரிசையில் தொகுத்து அகராதி உருவாக்கினார்.
    - **தேம்பாவணி:** இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தை சூசையப்பர் மீது பாடிய காப்பியம்.
    - **எழுத்துச் சீர்திருத்தம்:** 'எ', 'ஒ' குறில், நெடில் வேறுபாடுகளுக்கு (எ, ஏ, ஒ, ஓ) சீர்திருத்தம் செய்தார்.
    - **நூல்கள்:** இலக்கணம், உரைநடை நூல்கள், சிற்றிலக்கியங்கள் (கித்தேரியம்மாள் அம்மானை), மற்றும் கதைகள் (பரமார்த்த குரு கதை) எழுதினார்.
- **சிறப்புப் பெயர்கள்:** தைரியநாதர், வீர ஆரியன்.

- **மறைவு:** 1742 (பிப்ரவரி 4).

தமிழின் மீது கொண்ட பற்றால், சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்று, தமிழுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருமைக்குரியவர்.

வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி) 18-ஆம் நூற்றாண்டில் தமிழில் இலக்கியம், இலக்கணம் மற்றும் அகராதி படைத்த சிறந்த ஐரோப்பியத் தமிழறிஞர் ஆவார். தேம்பாவணி, சதுரகராதி, பரமார்த்த குருவின் கதை, தொன்னூல் விளக்கம், மற்றும் வேதியர் ஒழுக்கம் ஆகியவை இவரது முக்கிய நூல்களாகும். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் மற்றும் அகராதி உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

வீரமாமுனிவரின் முக்கிய நூல்கள்:

- **தேம்பாவணி:** இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தை புனித யோசேப்பின் வரலாற்றைக் கூறும் காவியம்.
- **சதுரகராதி:** தமிழில் முதல் அகராதி (1732). இது அகராதித் துறைக்கு முன்னோடியாகும்.
- **பரமார்த்த குருவின் கதை:** நகைச்சுவை உணர்வுடன் எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பு.
- **தொன்னூல் விளக்கம்:** தமிழ் இலக்கண நூல் (எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி).
- **வேதியர் ஒழுக்கம்:** கத்தோலிக்க மதத்தின் கொள்கைகளை விளக்கும் நூல்.
- **திருக்காவலூர்க் கலம்பகம்:** இறைப்பணி சார்ந்த சிற்றிலக்கிய நூல்.

- **கித்தேரியம்மாள் அம்மானை**: ஒரு கத்தோலிக்கப் புனிதரின் வரலாறு கூறும் நூல்.
- **அடைக்கல நாயகி வெண்கலிப்பா**: கன்னி மரியாள் மீதான பக்தி நூல்.
- **மொழிபெயர்ப்புகள்**: திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ் இலக்கியத்தில் பங்களிப்பு: தமிழ் எழுத்துக்களைத் தற்போதைய வடிவத்திற்கு கொண்டு வர எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர் வீரமாமுனிவர். இவர் தமிழில் கவிதைகள், வசன நூல்கள், அகராதிகள் மற்றும் இலக்கண நூல்கள் எனப் பல படைப்புகளை தமிழுக்கு அளித்துள்ளார்

கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்

ஆசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B5%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AF%8A%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%B0%E0%AF%8D/%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D

1. வீரமாமுனிவர்

மேலை நாட்டு நல்லறிஞர் பலர் தமிழ் நாட்டிற் போந்து சிறந்த தமிழ்ப் பணி செய்துள்ளார்கள். அவருள் இத்தாலிய தேசத்து வித்தகர் சிலர் ; ஜெர்மானிய தேசத்தவர் சிலர் ; ஆங்கில நாட்டைச் சேர்ந்தவர் சிலர். அவர்களால் தமிழ் மொழி பெற்ற நன்மைகள் பலவாகும்.

ஏறக்குறைய இருநூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னே இத்தாலிய தேசத்தில் பிறந்த பெரியார் ஒருவர் தமிழ் நாட்டுக்கு வந்தார்.

அவர் யேசுநாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்; இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டவர். பெஸ்கி என்பது அவர் பெயர். தமிழ் உலகம் அவரை வீரமாமுனிவர் என்று போற்றுகின்றது.

தமிழ் நாட்டில் யேசு மத போதகம் செய்வதற்காகத் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினார் வீரமாமுனிவர்; அந்நாளில் சிறந்த தமிழாசிரியர்களாக விளங்கிய சுப்பிரதீபக் கவிராயர் முதலியோரிடம் முறையாகத் தமிழ் நூல்களை ஓதி உணர்ந்தார். திருக்குறளின் தெள்ளிய நயமும், சிந்தாமணியின் செழுஞ்சுவையும், கம்ப ராமாயணத்தின் கவியின்பமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. சிந்தாமணியைப் போல் கிருஸ்து மதச் சார்பாக ஒரு பெருங்காவியம் செய்ய அவர் ஆசைப்பட்டார். அவ்வாசையின் கனியே தேம்பாவணி என்னும் அருங்காவியம்.

யேசுநாதரைக் கைத்தாதை சூசையப்பர் சரித்திரம் தேம்பாவணியில் விரித்துரைக்கப் படுகின்றது. சிந்தாமணிையைப் பின்பற்றி எழுந்த அக்காவியத்தில் திருக்குறளின் மணம் கமழ்கின்றது; கம்பரது கவிநலம் திகழ்கின்றது: கதைப் போக்கிலும் பலவிடங்களில் தேம்பாவணி கம்பரது காவியத்தைத் தழுவிச் செல்கின்றது. இதற்கு ஒரு சான்று காண்போம்.

மிதிலைமா நகரில் இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் புரிந்த செய்தியை மிக நயமாக எழுதியுள்ளார் கம்பர். மன்னன் மாளிகையில் மலைபோற் கிடந்தது மண வில். அதனை எடுத்து வளைப்பதற்காக இராமன் சென்றான். இமை கொட்டாமல் எல்லோரும் பார்த்து நின்றார். அவ்வில்லை எளிதில் கையால் எடுத்தான் இராமன். அவ்வளவுதான் தெரிந்தது. அப்பால் அது ஒடிந்து விழுந்த ஓசை இடிமுழக்கம் போல் கேட்டது. வில்லை எடுத்ததற்கும் ஒடித்ததற்கும் இடையே இராமன் என்ன செய்தான் என்பதை எவரும் அறிந்திலர். 'எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்' என்று கூறுகின்றார் கம்பர்.

தேம்பாவணியில் முனிவர் இந் நயத்தை வடித்தெடுத்து வைத்துள்ளார். இளம் பாலனாகிய தாவீது கொடிய கோலியாத்து என்பவனைக் கொன்ற செய்தி கிருஸ்தவ ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. கோலியாத்து என்பவன் தேக வலிமை வாய்ந்தவன்; ஆனால் தெய்வ நிந்தனை செய்தவன். அவனது செருக்கையும் சிறுமையையும் அறுத்து ஒழிக்கக் கருதினான் தாவீது. ஆண்டவன் அருளைத் துணைக்கொண்டு, கவணும் கல்லும் கையில் எடுத்துப் பகைவனை நோக்கி நடந்தான். குன்று போல நின்ற கோலியாத்து, பகைத்துப் போர் செய்யத் துணிந்து வந்த பாலனை உருத்து நோக்கினான்; கோடையிடி போல் முழங்கினான்; "அடா, மடையா மதயானையின் முன்னே சிறு நாயின் வேகம் செல்லுமா? என்று ஏளனம் பேசினன். அப்பொழுது அக் கொடியவனது நெற்றியில் திண் என்று ஒரு கல்வத்து அடித்தது. திடீரென்று அவன் மண் மேல் விழுந்தான். அக்கல்லை விட்டெரிந்தவன் தாவீதனே என்று எல்லோ எல்லோரும் அறிந்தனர். அவன் எப்போது கல்லைக் கவணில் ஏற்றானான்? எப்படிச் சுழற்றினுன்? எவ்வாறு வீசினான்? இவற்றை எல்லாம் அங்கு நிறைந்து நின்றவருள் எவரும் அறிந்திலர்; எல்லோரும் கல்லடித்த ஓசையைக் கேட்டார்; வல்லுருவம் மண்ணிடை வீழக் கண்டார் என்று வீரமாமுனிவர் பாடியுள்ளார்.

முனவரது கவித்திறனைக் குறித்து வழங்கும் கதைகள் பலவாகும். அவர் விரைவாகக் கவி சொல்லும்போது நான்கு மாணவர் வரிசையாக அமர்ந்து ஒவ்வொரு வரிசையை ஒவ்வொருவர் ஏட்டில் எழுதுவாரென்றும், ஐந்தாவது மாணவன் அந்நான்கு அடிகளையும் சேர்த்தெழுதிப் பாட்டு வடிவத்தில் காட்டுவானென்றும் ஒரு கதை வழ்ங்குகின்றது. இன்னும் தேம்பாவணிக் காவியத்தை முனிவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிய பொழுது அதன் நயங்களை உணர்ந்த சங்கப் புலவர்கள் அவருக்கு வீரமா முனிவர் என்னும் பட்டம் அளித்தார்கள் என்று மற்ருெரு கதை கூறும். இத்தகைய கதைகளின் உதவியில்லாமலே தேம்பாவணிக் கவிதையின் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளக்கூடும்.

கிருஸ்து மத சேவையில் சிறந்த ஆர்வம் வாய்ந்த வீரமாமுனிவர் கொள்ளிட நதியின் வட கரையில் உள்ள ஏலாக்குறிச்சி என்ற சிற்றைரில் சிறந்த கோயில் ஒன்று கட்டினர்; தேவ மாதாவாகிய மரியம்மையின் திருவுருவத்தை அக்கோயிலில் நிறுவினர்; அடியாரைக் காத்தருளும் மாதாவை அடைக்கல மாதா என்று அழைத்தார்; அம்மாதாவின் அருட்காவலில் அமைந்த இடத்திற்குத் திருக்காவலூர் என்று பெயரிட்டார்; அவ்வூரின் பெருமையை அன்பர்கள் அறிந்து இன்புறும் வண்ணம் "திருக்காவலூர்க் கலம்பகம்" என்னும் பிரபந்தம் பாடினார். அடைக்கல மாதாவின் திருவடிகளில் வீரமாமுனிவர் அணிந்த கலம்பகப் பாமாலை சிறந்த தமிழ் மணம் கமழ்வதாகும்.

திருக்காவலூரில் வீரமாமுனிவருக்கு இருந்த காதல் திருவேங்கடத்தில் குலசேகர ஆழ்வார் கொண்டிருந்த காதலை ஒத்ததாகும்; அரசர் குலத்திற் பிறந்த குலசேகர ஆழ்வார் மண்ணரசையும் விண்ணரசையும் விரும்பவில்லை; திருமால் நின்றருளும் திருவேங்கடமலையில் ஒரு மரமாக நிற்கவும், படியாகக் கிடக்கவும், ஆறாகப் பாயவும் மீனகத் திரியவும் ஆசைப்படுகின்றார். இத்தகைய ஆசை வீரமாமுனிவரது பாட்டிலும் வெளிப்படுகின்றது. அடைக்கல மாதாவின் அருட்காவலில் அமைந்த திருக்காவலூர்ச் சோலையில் புல்லாக நிற்கவும், வண்டாகத் திரிந்து தேன் உண்டு தெள்ளிய கீதம் பாடவும் விரும்புகின்றர் முனிவர். எனவே, திருவேங்கடமலையில் கல்லாய்க் கிடக்க விரும்பும் குலசேகர ஆழ்வாரும் திருக்காவலூர்ச் சோலையில் புல்லாய்க் கிடக்க ஆசைப்படும் வீரமாமுனிவரும் தத்தம் சமய வழிபாட்டில் தலைசிறந்த அன்பு வாய்ந்தவர் என்பது இனிது விளங்கும்.

இத்தகைய கவஞராகிய வீரமா முனிவர் தமிழ் அகராதியின் தந்தையாகவும் விளங்குகிறார். தமிழ்ச் சொற்களை அகரம் முதலாகத் தொகுத்தும் வகுத்தும் பொருள் எழுதியவர் அவரே. அவர் காலத்துக்கு முன்பு தமிழ்ப் பதங்களின் பொருள் தெரிந்து கொள்வதற்குப் பல நிகண்டுகள் இருந்தன. திவாகரம் என்பது ஒரு நிகண்டு. அது திவாகர முனிவரால் செய்யப்பட்டது. பிங்கலம் என்பது மற்றொரு நிகண்டு. அவை இரண்டும் மிகப் பழமை வாய்ந்தன. பிற்காலத்தில் சூடாமணி

என்னும் நிகண்டு பெயர் பெற்று விளங்கிற்று. அந்நிகண்டுகள் எல்லாம் செய்யுள் நடையிலே அமைந்திருந்தன ; மனப்பாடம் செய்து கொள்வதற்கு ஏற்ற வகையிலே இயற்றப்பட்டிருந்தன. கவிபாடும் புலவர்களும் உரை காணும் அறிஞர்களும் அவற்றைக் கற்றுப் பயனடைந்தார்கள். ஆயினும் கற்றவரேயன்றி மற்றவரும் தமிழ்ப் பதங்களே எளிதாக உணர்வதற்கு மேல் நாட்டு அகராதி முறையே சிறந்ததென்று வீரமாமுனிவர் கருதினர். பண்டை நிகண்டுகளில் அமைந்த பதங்களை வரிசைப்படுத்திச் சதுர் அகராதி என்னும் பெயரால் அரியதோர் நூலை அவர் வெளியிட்டார். அதுவே பிற்காலத்தில் எழுந்த பேரகராதிகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது.

இன்னும் தமிழ் நூல்களுள் தலைசிறந்து விளங்கும் திருக்குறளை மேலே நாட்டார்க்கு முதன் முதற் காட்டியவர் வீரமாமுனிவரே என்பது பலர் கொள்கை. முப்பாலாக அமைந்த திருக்குறளின் அறத்துப்பாலேயும், பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார் முனிவர். அந்நூலே ஏனைய ஐரோப்பிய மொழிகளில் திருக்குறள் வழங்குவதற்கு வழிகாட்டிற்று. ஜெர்மானிய மொழியில் திருக்குறளே முற்றும் மொழி பெயர்த்த கிரால் என்பவர்க்கும், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த எல்லீசர், போப்பையர் முதலிய அறிஞர்க்கும் அது பெருந்து திணையாயிருந்தது.

இவ்வாறு பல துறைகளில் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர், தமிழ் வசன நடையையும் வளர்ப்பாராயினர். கிருஸ்து மத போதகம் செய்யும் உபதேசியார்களுக்காக அவர் ஒரு வசன நூல் எழுதினர்; அதற்கு வேதியர் ஒழுக்கம் என்று பெயரிட்டார். அந்நூலே வீரமாமுனிவர் இயற்றிய உரைநடை நூல்களுள் தலை சிறந்தது என்று போப்பையர் கூறுகின்றார்.

சமயத்துறையில் எழுத்துவாதம் நிகழ்த்துவதிலும், வாக்குவாதம் செய்வதிலும் வீரமாமுனிவர் சிறிதும் தளர்ந்தவரல்லர். தரங்கம்பாடியில் அமைந்த[7] தேனிய சங்கத்தார்க்கும், வீரமாமுனிவர்க்கும் பெரியதோர் வாதம நிகழ்ந்தது. தேனிய

சங்கத்தாரது கொள்கைகளை மறுத்து ஒரு நூல் எழுதினார் முனிவர். அதற்கு வேத விளக்கம் என்பது பெயர். தேனிய சங்கத்தார் வேத விளக்கத்தை மறுத்துத் திருச்சபை பேதகம் என்னும் பெயரால் ஒரு சிறு நூல் வெளியிட்டார்கள். அதற்கு மறுப்பாக முனிவர் பேதகம் அறுத்தல் என்று பெயரிட்டு ஒரு கட்டுரை எழுதினர். இவ்வாறாக வாதம் வளர வளரத் தமிழ் வசன நடையும் திருந்தி வளர்வதாயிற்று. இது வாதத்தால் விளைந்த நலம்.

இன்னும் முனிவர் பல வாக்கு வாதங்களும் செய்ததாக அவர் சரித்திரம் கூறுகின்றது. ஒருகால் முனிவரை வாதிலே வெல்லக்கருதி, ஒன்பது சடைப்பண்டாரங்கள் திருக்காவலூரில் போந்து ஒரு மாதகாலம் அவரோடு பெருவாதம் செய்து தோற்றார்கள் என்றும், தோற்றவர்களில் அறுவர் யேசு மதத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்றும், ஏனைய மூவரும் தம் சடையை அறுத்தெறிந்துவிட்டுப் போயினர் என்றும் சொல்லப்படுகின்றது.

பின்னொரு சமயம் சிவப்பிரகாச முனிவர் என்னும் வீர சைவப் பெரியார்க்கும், வீரமாமுனிவர்க்கும் ஒரு வாதம் நிகழ்ந்ததாம். கிருஸ்து மதக் கொள்கைகளை எடுத்துரைத்தாராம் வீரமாமுனிவர். அவற்றைச் செம்மையாக மறுத்து வெற்றி பெற்ற சிவப்பிரகாசர் 'ஏசு மத நிரா கரணம்' என்னும் பெயரால் ஒரு நூல் இயற்றினர் என்று அவர் சரித்திரம் கூறுகின்றது. இக்கதைகளை யெல்லாம் முற்றும் நம்ப முடியாவிட்டாலும் வீரமாமுனிவர் வாது செய்வதில் விருப்புடையவர் என்பது நன்கு விளங்குவதாகும்.

வீரமாமுனிவர் தமிழ் மொழியின் இலக்கணத்தையும் நன்றாக ஆராய்ந்தார். தொல்காப்பியம் முதலாக நன்னூல் ஈறாகவுள்ள இலக்கண நூல்களேயெல்லாம் கற்றார்; 'தொன்னூல் விளக்கம்: என்னும் பெயரால் ஒரு செந்தமிழ் இலக்கணம் செய்தார். அது பெரும்பாலும் பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலை ஒத்திருக்கின்றது. ஆயினும் நன்னூலில் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் மட்டுமே உண்டு. வீரமாமுனிவரது தொன்னூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து

இலக்கணமும் அடங்கியுள்ளன. "அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கினன் வீரமாமுனியே" என்பது தொன்னூலின் சிறப்புப் பாயிரம். மேலைநாட்டுச் சிறந்த கருத்துக்களும் அந்நூலில் அமைந்து அழகு செய்கின்றன. இன்னும் ஏட்டுத் தமிழுக்கும் [8] பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்த முனிவர் அவ்விரு தமிழுக்குமுரிய இலக்கணத்தைத் தனித்தனியாக லத்தீன் மொழியில் எழுதினார். அந்நூல் இரண்டும் இப்பொழுது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இருவகைத் தமிழின் இலக்கணத்தையும் கிருஸ்தவ வேதியர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார் முனிவர்; திருக்காவலூரில் - ஒரு கல்லூரி அமைத்தார்; அங்குத் தாமே ஆசிரியராக அமர்ந்து இலக்கணம் போதித்தார்; கிருஸ்து மத வேதியர்கள் பிழையின்றித் தமிழ் மொழியில் பேசவும் எழுதவும் வல்லவராக விளங்குதல் வேண்டுமென்று பெரிதும் முயன்றார்.

இன்னும் நகைச்சுவை நிரம்பிய கதைகளும் எழுதினார் வீரமாமுனிவர். அவற்றுள் 'பரமார்த்த குரு கதை' என்பது சாலச் சிறந்தது.

இத்தகைய தமிழ்த்தொண்டு புரிந்த முனிவர் அறுபதாம் வயதில் அம்பலக்காட்டிலுள்ள கிருஸ்தவ மடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் ஆக்கிய நூல்களால் தமிழ்த்தாய் அழகு பெற்றாள். தேம்பாவணி, தமிழ் அன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழ்கின்றது. காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது. தொன்னூல் பொன்னூலாக இலங்குகின்றது. சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களில் ஒருவராக விளங்குகின்றார்.



வீரமாமுனிவர் ஒரு சித்த மருத்துவரா?

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-dec24/47673-2025-01-02-06-59-00

டாக்டர் சு.நரேந்திரன்

கான்ஸ்டான்சோ பெஸ்க்கி, எனும் வீரமாமுனிவர் இத்தாலி நாட்டுக் கிறித்தவ மத போதகர். 1710ஆம் ஆண்டு தனது 30ஆவது வயதில் தமிழகத்துக்கு வந்து 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளைத் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப தேம்பாவணி என்ற பெரும் காப்பியத்தை எழுதி 'தமிழர் அல்லாத ஒருவர் இயற்றிய' என்ற பெருமையைப் பெற்றார். இத்துடன் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், தமிழ் - லத்தீன் அகராதி, நிகண்டுக்கு மாற்றாகச் சதுரகராதி, திருக்குறள்-இலத்தீன் (அறத்துப்பால், பொருட்பால்) மொழிபெயர்ப்பு, பரமார்த்த குருவின் கதை என்ற நகைச்சுவை நூல், உரைநடை நூல்கள் தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகியவைகளை உருவாக்கியவர் என்பது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு தெரிந்தவைகள். இது தவிர வீரமாமுனிவரின் மற்றொரு சிறப்பு, சித்த மருத்துவத்தைக் கற்று நூல்களை எழுதி உள்ளார் என்பது ஆகும். ஆனால் இந்நூல்கள் இவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று கூறுவோரும் உண்டு.



வீரமாமுனிவரின் மருத்துவ நூல்கள்

நசகாண்டம், நவரத்தின சுருக்க மாலை, மகாவீரிய சிந்தாமணி, வைத்திய சிகாமணி, சுரமஞ்சரி, பூவரசங்காய் எண்ணெய் (கலிவெண்பா), மேகநாதத் தைலம் (கலிவெண்பா), பஞ்சாட்சர மூலிகை எண்ணெய் (ஆனந்தகளிப்பு), சத்துரு சங்கார எண்ணெய் (நொண்டிச் சிந்து), வீரமெழுகு, முப்பு சூத்திரம் (நொண்டிச்சிந்து), அனுபோக வைத்திய சிகாமணி, வீரிய சிந்தாமணி இரண்டாம் பாகம், குணவாகடம், நிலைக் கண்ணாடி ஆகிய நூல்கள் வீரமாமுனிவரால் எழுதப்பட்டவை.

நூல்களின் சிறப்பு

வயிறும் வாதமும்

"வாதி வழுவி வைத்தியன் ஆனான்' என்பர்.

வாத வித்தையிலும் முயன்றுள்ளார் என்பது அவர்தம் நூலால் தெரியவருகிறது. வாதம் படித்தாலின்றிப் பாசனங்களின் இயல்புகளைத் தெரிந்து கொள்ள இயலாது.

இயங்களில் (இணைப்பு)

உடலிலுள்ள ஓர் உறுப்போ சில உறுப்புகளோ இயங்க வேண்டிய முறையில் இயங்காமல் தடைபடும் போது வாத நோய்களாக ஏற்படுகின்றன. எனவே வாய்வு வயிற்றில் தங்காமல் பாதுகாப்பது முக்கியமாகும். வயிற்றினைத் தூய்மையாக வைப்பதற்கு வீரமாமுனிவர் தரும் சிறப்பான மருந்து 'மலபந்த நிவாரணி' ஆகும் (வைத்திய சிந்தாமணி, ப,45).

சுரம்

சுரம் என்பது தனியாக ஏற்படக்கூடிய நோயன்று. அது நோய்களின் வெளிப்பாடே ஆகும்.இச்சுரம் வயிற்றில் ஏற்படும் மாற்றங்களினாலும் ஏற்படலாம். இதற்காக, சுரமஞ்சரி என்னும் நூலைப் படைத்துள்ளார். அதிலுள்ள கௌரி மாத்திரை, விஷ சுரக் குளிகை, பூபதி மாத்திரை, ஆனந்த பைரவன் போன்றவை, பல்வேறு சுரங்களுக்கும் சிறந்த பலன்

தருவதாய் அமைந்துள்ளன. வீரமாமுனிவரின் தமிழ்-இலத்தீன் அகராதியில் காய்ச்சல், விடுங் காய்ச்சல் (விட்டு விட்டு வருவது), விடாக் காய்ச்சல் (தொடர்ந்து வருவது), குளிர்க்காய்ச்சல், சுரக் காய்ச்சல், உட்காய்ச்சல், பித்தக் காய்ச்சல், மந்தக் காய்ச்சல், கடுங்காய்ச்சல், தோஷக் காய்ச்சல், பெருவாரிக் காய்ச்சல், (கொள்ளை நோய்) என 15 வகையான காய்ச்சலைக் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்துமா

இந்நோய்க்கு வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ள "சுவாசக் குடோரி'என்னும் மாத்திரை நல்ல பயன் தருகிறது (வைத்திய சிந்தாமணி,ப.14).

வீரமெழுகு

பதினான்கு சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வீரமெழுகு பற்றி வீரமாமுனிவர் உரைத்துள்ளார். உடம்பின் அளவறிந்து இதனை அளவுப்படி உண்டுவரக் கைகால் குடைச்சல், சூலை, கால் பிடிப்பு, கால் முடக்கு, புண்வகைகள், சிலந்திப் புண்கள் தீரும் என்கிறார்.

வீரமாமுனிவர் நசகாண்ட வெண்பா நூறு, உரையாசிரியர் மாங்காட்டு வடிவேலர் நோய்களை நீக்கும் மருத்துவ நூல் என்று விளக்கம் வழங்கியுள்ளார். இறுதி ஆறு வெண்பாக்கள் நோய்வினை நீக்கம் பற்றிப் பேசுகின்றன. நாகச் செந்தூரம் முதல் வாத நீக்க உருண்டை வரை முப்பது மருந்து செய்முறைகள் மொழியப்பட்டுள்ளன.

விஷசஞ்சீவி மருந்து

இம்மருந்து புகையிலை, பனைவெல்லம் ஆகியவைகளைப் புடமிட்டுச் சாம்பலாக்கிப் பயன்படுத்தப்படுகிறது. இது நாகப்பாம்பு விஷங்களையும் குறைத்து ஆளைப் பிழைக்கச் செய்யும். இது மலிவானது. எளிதாய் செய்யக் கூடியது.

தமிழ் மருத்துவம்

மேற்கண்ட நூல்கள் அனைத்தும் தமிழ்நாட்டுச் சித்த மருத்துவ மரபினையொட்டிப் பிற நூல்களில் கூறப் பெற்றுள்ள மருந்தினையும்

மருந்து செய்முறையினையும் வீரமாமுனிவர் கூறியுள்ளார். நசகாண்டம் நூலின் மூன்றாம் பாடல் காப்புச் செய்யுளில் வீரமாமுனிவர் இம்மருத்துவத்தைச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

"தாதறிந்தோ னாகிற் றனைப் பயந்த தாயாக
மாதா வென் றெண்ணி மகிழுவார் வேதநெறி
பக்திக்கு மாதிப் பரனைப் பணிவோர்க்குச்
சித்திக்கு மிந்நூல் திறம்" (நசகாண்டம் பாடல்.3)

மாதா மற்றும் ஆதி பரனை வேதநெறியின் அடிப்படையில் பணிவோர்க்கு இந்நூல் கைவரப்பெறும் என்று குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர் - நூலில் தன் பெயரை வெளியிடுகிறார்

"பார்த்திடு வீரமாமுனிவன் சொன்ன
பழுதில்லாத் தயிலத்தின் பாகமதனை
ஆர்க்கும் வீணாக விடாமல் இங்கே
யமைதியுடையவர்க் காராய்ந்து உதவவே"

இப்பாடலில் தமது பெயரை வெளியிடுகிறார் வீரமாமுனிவர். மேலும் சத்துரு சங்கார எண்ணெய் சொல்லப்படும் பாடல்கள் அன்னை மரியைப் பணிந்து என்ற வரியும் "வீரமாமுனியென்றன் முறையிதுவே' என்று கூறும் சொற்றொடரும் கிறித்துவராகிய வீரமாமுனிவர் இந்நூற்களை இயற்றினார் என்பதற்குச் சான்றாகும்.

வீரமாமுனிவரின் மருத்துவச் சிறப்பு

'வீரமாமுனிவர் வாகடத்திரட்டு' என்ற பெயரில் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு வீரமாமுனிவரின் மருத்துவ நூற்கள் பக்கீர் பா.மு.அப்துல்லா சாயபு அவர்கள் முதன்முதலாக வெளியிட்டுள்ளார். பதிப்புரையில் இந்நூலானது ராஜரிஷியும், மகா சாதுவும் ஆங்கிலம் மற்றும் தமிழ் முதலியவைகளில் மிகவும் தேர்ச்சியுற்று தமிழில் பல நூற்கள் இயற்றி கீர்த்தி பெற்றவருமாகிய வீரமாமுனிவரால் செய்யப்பட்டது என்றும், நசகாண்டம், நவரத்தினச் சுருக்கமாலை, மகாவீரியச் சிந்தாமணி என்னும் மூன்றினையும் ஒருங்கு சேரத் திரட்டிய காரணத்தால் வாகடத்திரட்டெனும் திருநாமம் பெற்று

விளங்கும் பெருமை வாய்ந்தது என்றும் அப்துல்லா அவர்கள் குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர் வாகடத்திரட்டின் இரண்டாம் பதிப்பின் ஆசிரியர் இராமச்சந்திரன் அவர்கள் இந்நூலின் பெருமையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். வீரமாமுனிவர் வாகடத்திரட்டு என்னும் இந்நூல் அளவுகடந்த சிறப்பினையுடையதாகும். இதை டாக்டர் பக்கீர் பா.மு.அப்துல்லா அவர்கள் பதிப்பித்துள்ளார்கள் என்பதே தனிச்சிறப்பை விளக்கும். அப்துல்லா அவர்கள் வீரமாமுனிவரின் பாடல்களுக்கு விரிவான விளக்கம் எழுதியதோடல்லாமல் ஒவ்வொரு மருந்துக்கும் அனுபவப்பூர்வமான செய்முறை விளக்கத்தையும் எழுதியுள்ளார். அது எவ்வளவு அற்புதமாகப் பலன் அளிக்கிறது என்பதையும் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரமாமுனிவர் நசகாண்டம் மூலமும்-உரையும் கோவிந்தசாமி என்பவரால் 1980இல் வெளியிடப்பட்டது. இதற்கு அந்நாள் புதுவை அரசின் வருவாய்த்துறைச் செயலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சாமி என்பவர் வழங்கிய அணிந்துரையில் புதுவையில் வீரமாமுனிவரின் வைத்திய முறைகள் வழங்கி வந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சித்த வைத்தியத்தைக் கடைப்பிடித்து வந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் வீரமாமுனிவரைக் குருவாகக் கொண்டு, வைத்தியத்தைச் செய்து வந்தனர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வீரமாமுனிவரே பொதியில் புத்தோளான அகத்திய முனிவரையே தம் குருவாக முதற்பாட்டிலேயே கூறியுள்ளார் என்று குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவர் வாகடத்திரட்டின் இரண்டாம் பாகத்தை வெளியிடும்போது அச்சிடுவோரின் கடவுள் வணக்கம் என்ற தலைப்பின் கீழ்

“பூதலத்தில் வாழ்வோர் புதிய நலமெய்துதற்கு
மாதவத்தோராம் வீரமாமுனிவர் ஆதரத்தால்
வெய்தவுயர் நன்முறைகள் சேர்ந்தபன் நூலச்சிடவே
துய்யவொருவன் றுணை”

என்ற பாடல் மூலம் வீரமாமுனிவரே இந்நூலைச் செய்தார் என்று அப்துல்லா சாயபு அவர்கள் கூறுகிறார்.

இந்த மருத்துவ நூற்களைச் செய்த விதம் பற்றிக் கூறும் போது முனிவர் தாமே பின்வருமாறு கூறுகிறார்.

"திசைமேவுந் தென்கிரியிற் சேருமுனி நூலாய்ந்து
நசகாண்ட மென்று நவில்'

பக்கீர் முகமது பா.மு.அப்துல்லா சாயபு வீரமாமுனிவரின் நூலை வெளியிட்டு, தக்க ஆதாரங்களை முன்வைத்தாலும் சித்த மருத்துவ நூல்களை எழுதியிருக்க வாய்ப்பில்லை என முனைவர் மறைதிரு இராசமாணிக்கம் "வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்' என்ற தன் நூலில் குறிப்பிடுகிறார். அதற்கான காரணங்களை அவர் கூறுகையில் "நூற்களின் நடையும், கருத்தும் பிற்காலத்தவையாக உள்ளது. இல்லறத்தில் ஈடுபட்ட புலவர்கள் கூடப் பயன்படுத்த விரும்பாத சில மகடூஉ முன்னிலைகள் இங்கு வருகின்றன. கருத்துக்கள் முற்றிலும் முரண்பட்டு, கருத்துக்கள் மேல்வாரியாகவும் விளம்பரமாகவும், சிற்றின்பப் போக்கிலும் அமைந்துள்ளன. மற்ற நூல்களைப் போல முனிவரும் அவர்தம் கூட்டாளிகளும் இம்மருத்துவ நூல்களில் சான்று பகரவில்லை' என்று கூறி இறுதியாக இந்நூல்களையும் முனிவர் எழுதிய பிற நூல்களையும் ஊன்றிப்படிப்போர் மேற்கூறிய கருத்துக்களைக் கண்டுணரலாம்' என்று விளக்கம் அளிக்கின்றார். ஆனாலும் இன்றைய நிலையில் மதுரையில் உள்ள "தேம்பாவணி' என்ற மருத்துவமனையில் வீரமாமுனிவரின் சித்த மருத்துவம் கையாளப்பட்டு, பல நூறு பேர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- டாக்டர் சு.நரேந்திரன், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

வீரமாமுனிவர் (1680–1747) இத்தாலியில் பிறந்து தமிழகம் வந்து, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட சிறந்த ஐரோப்பியத் தமிழறிஞர் ஆவார். இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி. இவர் தமிழில் அகராதி, இலக்கணம், உரைநடை, சிற்றிலக்கியங்கள், மற்றும் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர். தமிழின் முதல்

அகராதியான சதுரகராதி (1732) இவரால் தொகுக்கப்பட்டது, இது விக்கிப்பீடியா தளத்தின் மூலம் அறியப்படுகிறது.

வீரமாமுனிவர் பற்றிய முக்கிய குறிப்புகள்:

- **பிறப்பு மற்றும் வரவு:** நவம்பர் 8, 1680-ல் இத்தாலியில் பிறந்து, 1710-ல் தனது 30-ஆவது வயதில் தமிழகம் வந்தார்.
- **தமிழ்த்தொண்டு:** சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்று, ஆழ்ந்த புலமை பெற்றார்.
- **சதுரகராதி:** தமிழின் முதல் அகராதியான 'சதுரகராதி'யை 1732-ல் தொகுத்து வெளியிட்டார்.
- **எழுத்துச் சீர்திருத்தம்:** தமிழ் எழுத்துகளில் (எ.கா: எ, ஒ, ெ, ொ) சீர்திருத்தங்கள் கொண்டு வந்து, அச்சுக்கலைக்கு ஏற்றதாக மாற்றினார்.
- **முக்கிய நூல்கள்:**
    - **தேம்பாவணி:** இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தை யோசேப்பு மீது பாடப்பட்ட காப்பியம்.
    - **காவலூர்க் கலம்பகம், திருக்காவலூர் கலம்பகம்.**
    - **வேதியர் ஒழுக்கம்:** தமிழ் உரைநடை நூல்.
    - **தமிழ்-இலத்தீன் அகராதி.**
- **தமிழ் பெயர்:** தமிழ் மேல் கொண்ட பற்றால், தன் பெயரை 'வீரமாமுனிவர்' என மாற்றிக்கொண்டார்.
- **மறைவு:** பிப்ரவரி 4, 1747-ல் காலமானார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், அகராதித் துறைக்கும், தமிழ் உரைநடைக்கும் இவர் ஆற்றிய பணிகள் ஈடுஇணையற்றவை, என Dinamani கட்டுரை குறிப்பிடுகிறது.

வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி, 1680–1747) என்பவர் 1710முதல் 1747 வரை தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு இத்தாலிய ஜேசுசபை குருவும் ஆழ்ந்த தமிழ் அறிஞரும் ஆவார் . அவர் தமிழ் மொழிச் சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார், தெம்பாவணி*எனும் காவியத்தை எழுதினார்*, முதல் தமிழ்-லத்தீன் அகராதியை உருவாக்கினார், மேலும் ஒரு தூதராகப் பணியாற்றி, தமிழ் இலக்கியத்தையும் எழுத்துமுறையையும் குறிப்பிடத்தக்க அளவில் நவீனமயமாக்கினார்.

வீரமாமுனிவரின் வாழ்க்கையில் முக்கிய மைல்கற்கள்

- **நவம்பர் 8, 1680:** காஸ்டிக்லியோன் டெல்லே ஸ்டிவியர், இத்தாலியில் கான்ஸ்டான்சோ கியூசெப் பெஸ்கியாகப் பிறந்தார்.
- **1698:** ஜேசுசபை சபையில் சேர்ந்தார்.
- **1709:** குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- **1710:** இந்தியாவின் கோவாவுக்கு வந்தடைந்து, பின்னர் தமிழ்நாட்டிற்கு (மதுரை தூதுக்குழு) குடிபெயர்ந்தார்.
- **1711:** தமது சமயப் பிரச்சாரப் பணிகளைத் தொடங்க மதுரை வந்தடைந்தார்; காவி உடை அணிவது உள்ளிட்ட தமிழ் வாழ்க்கைமுறையைத் தழுவினார்.
- **1718–1733:** திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஏலக்குறிச்சியில் வசித்து, அங்கு புனித பெரியநாயகி தேவாலயத்தைக் கட்டினார்.
- **1720கள்–1730கள்: பின்வருபவை** உட்பட, தனது முக்கியப் படைப்புகளை உருவாக்கினார்:
    - **தெம்பாவனி (1726):** புனித யோசேப்பின் வாழ்க்கையைப் பற்றிய 3,615 செய்யுள்களைக் கொண்ட ஒரு காவியம்.

- **தமிழ் எழுத்துமுறை சீர்திருத்தங்கள்:** சீர்திருத்தப்பட்ட தமிழ் எழுத்துமுறை (எ.கா., 'வோ', 'மோ' போன்ற நீண்ட மற்றும் குறுகிய உயிரெழுத்துக்களை வேறுபடுத்துதல்).
- **அகராதியியல்:** சதுரகரத்தியை (*தமிழ்-லத்தீன் அகராதி*) தொகுத்தார் .
- **இலக்கியம்:** காவலூர் கலம்பகம், வேதியர் ஒழுக்கம் (*உரைநடை*) *மற்றும்* பரமார்த்த குருவின் கதை (*ஒரு நையாண்டி*) ஆகியவற்றை எழுதினார் .

- **1730கள்-1740கள்:** கர்நாடக நவாபான சந்தா சாஹிப்பின் திவானாக (பிரதம அமைச்சராக) பணியாற்றினார்.
- **பிப்ரவரி 4, 1747:** தமிழ்நாட்டின் மணப்பாடு என்ற இடத்தில் காலமானார்.

ஐரோப்பிய ஜேசுசபை மரபுகளுக்கும் தமிழ் பண்பாட்டு நடைமுறைகளுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்ட அவர், தமிழ் இலக்கியத்திற்கும் மொழிக்கும் ஆற்றிய ஆழ்ந்த பங்களிப்பிற்காகப் போற்றப்படுகிறார்.

காணொளிகள்

01] Veeramamunivar TNPSC Tamil Class (வீரமாமுனிவர் குறிப்பு)
https://www.youtube.com/watch?v=osU-j8s76to [16:08]

02] வீரமாமுனிவர் பற்றிய முழு தகவல்கள் | தமிழ் தொண்டாற்றிய வெளிநாட்டு அறிஞர்
https://www.youtube.com/watch?v=BVblLAoym-A [38:44]

03] வீரமாமுனிவர் PYQ (All)
https://www.youtube.com/watch?v=OTdt_mRRRpU [21:22]

04] வீரமாமுனிவர் | (2012 to 2023 All TNPSC Questions)
https://www.youtube.com/watch?v=rmiNIQSIOKM [31:19]

(😊)(😊) வீரமாமுனிவர் (😊)(😊)